# தமிழ் மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

# தரம் 10



தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா.
இணையத்தளம்: www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

# தமிழ்மொழியும்

# இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# தமிழ்மொழியும்

# இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 10

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித்துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப் பதிப்பு
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும்
அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,
தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர், கலாநிதி செ. யோகராஜா
கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு. க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி ரமீஸ் அப்துல்லா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ.பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
செல்வி. வி.விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை,தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்**

திரு. மு.தயாநிதி சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி. நா.சீதரன் சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு**

திரு. ந.அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,வலயக்கல்வி அலுவலகம்,மாத்தளை.
திரு. சி.கணபதிப்பிள்ளை
ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம், ஹற்றன்.
திரு. ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம், இரத்தினபுரி.
திருமதி. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கண்டி.
திருமதி. த.நிறைமதி
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு.
செல்வி .மாக்றித்தா வேதநாயகம்
சிரேஷ்ட ஆசிரியர், கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.

**மொழிப் பதிப்பு**

திரு. மு.தயாநிதி சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**கணினிப் பதிப்பு**

திருமதி ந.நந்தினி
தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி எம்.என்.எப்.றிஹானா
தேசிய கல்வி நிறுவகம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடம், வாரமொன்றுக்கு ஐந்து பாடவேளைகளாக 06 - 11 ஆந் தரங்களுக்கு ஒதுக்கபபட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இத் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் பொருளுணர்ந்து வாசிப்பதற்கும், எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை இன்றி எழுதவும் பேசவும் மொழியை பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும்.

06 - 11 ஆந் தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி, தமிழ் மொழியும் இலக்கியமும் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களைக் கொண்டமைந்துள்ளது. ஒருவருடைய எழுத்து, வாசிப்பு, பேச்சு, கேட்டல் திறன்களுக்கு மொழி அவசியமானதாகும். மொழியினைப் பொருளுணர்ந்து கற்க வேண்டும். இதற்காக மரபுவழி இலக்கணக் கருத்துக்களோடு நவீன மொழியல் கருத்துக்களையும் இணைத்து மொழி கற்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறை தேவையின்படி இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடம் செயன்முறைச் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் - கற்றலை முன்கொண்டு செல்வதற்கு எதிர்பாக்கபபடுகின்றது. பொருத்தமாகத் திட்டமிட்டு சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுடைய திறனை மேலும் வலுப்படுத்த முடியும்.

கற்பித்தல் - கற்றல் மாணவர் மையமாகக் கொண்டு வகுப்பறையில் இடம்பெறுவதனால், அதற்கேற்ப இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்படி கற்றற் பேறுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஒரு அலகைக் கற்பித்த பின்னர் எதனைத் தெரிந்திருக்க வேண்டும், அல்லது எதனை மதிக்க வேண்டும் அத்தகைய பேறுகளை எந்தளவுக்கு அடைய வேண்டுமென்பதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, மாணவர்களின் குறிப்பான செயல் அவதானிக்கப்பட வேண்டும், அவர்களது செயற்பாடு அளவிடப்பட வேண்டும், அத்தகைய செயற்பாடு மாணவர்களினாலே மேற்கொள்ளப்படவேண்டுமென்பதில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். ஆசிரியர் வழிகாட்டியில் தேர்ச்சி மட்டங்களுக்குத் தரப்பட்டுள்ள பாடமுன்னாயத்தங்களைப் பயன்படுத்தி, அதனடிப்படையில் ஏனைய விடய உள்ளடக்கங்களுக்கு பாட முன்னாயத்தங்களைத் தயார் செய்து வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் சிறப்பான முறையில் கற்பிப்பதற்கு பாடத் தலைப்புக்குப் பொருத்தாமன தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்பித்தல் சாதனங்களை அவர்களது நிலைக்கேற்ப தயாரித்து வகுப்பறை முகாமைத்துவத்தில் வெற்றியடைய எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்த வழிகாட்டி தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தமிழ் மொழித்துறை,**
**தேசிய கல்வி நிறுவகம்,**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 06. | பாடத்திட்டம் | viii |
| 07. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-112 |

# பாடத்திட்டம்

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# கேட்டலும் பேச்சும்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.1 எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப,சொற்களைச், செம்மையாக உச்சரிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடை<br>- சொற்கள்<br>- சொற்தொடர்கள்<br>- வாக்கியங்கள் | • லகர, ழகர, ளகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• ணகர, நகர, னகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• டகர, ரகர, றகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• கிரந்த எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார். | 02 |
| | 1.2 பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார். | • விழுமியக் கருத்தும் ஓசை நயமும் சொல் நயமும், பொருள் நயமும் கொண்ட செய்யுள்கள்<br>• நாட்டார்பாடல்கள் | • பாடலைச் /செய்யுளை ஓசையோடு ஓதுவார்.<br>• பாடலைச் /செய்யுளை மனனம் செய்வார்.<br>• பாடலைச் /செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவார் /ஓதுவார்<br>• பாடலைச் /செய்யுளை பொருள் விளங்கிச் சொல்லுவார் / ஓதுவார்<br>• பாடலைச் /செய்யுளைஉணர்ச்சி வெளிப்பாட்டுடன் சொல்லுவார் / ஓதுவார்.<br>• பாடலைச் /செய்யுளை ஓதும் முறையினை அறிந்து கொள்வார். | 04 |
| | 1.3 கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். | • செய்யுள்கள்<br>• கதைகள்<br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• உரையாடல்கள்<br>• மேடைப் பேச்சு<br>• துண்டுப் பிரசுரம்<br>• நாடகங்கள் | • பிரதான கருத்தை இனங்கண்டு கூறுவார்.<br>• ஒரு விடயத்தை செம்மையாகக் கேட்டுக் கிரகித்துக் கொள்ளுவார்.<br>• துணைக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.<br>• கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• பிரதான, துணைக் கருத்துக்களைத் தொகுத்து,சாராம்சத்தைக் கூறுவார்.<br>• குறித்த விடயம் தொடர்பாக தமது அபிப்பிராயத்தை முன்வைப்பார்.<br>• நயந்த பகுதியினை மற்றவர்களுக்கு இயல்பாக எடுத்துக் கூறுவார். | 02 |
| | 1.4 செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | • செய்யுள்கள்<br>• கவிதைப் பகுதிகள்<br>• உரைநடைகள்<br>• கதைப் பாடல்கள்<br>• நாட்டார் பாடல்கள்<br>• சொற்பொழிவுகள்<br>• நாடகங்கள் | • ஒரு விடயத்தை விருப்புடன் கேட்பார்.<br>• கேட்ட விடயத்தைக் குறிப்பெடுப்பார்.<br>• விடயத்தினை விளக்கதரவுகளைச் சேகரிப்பார்.<br>• தகவல்கள், விடயங்கள் பற்றிய சொந்த அபிப்பிராயங்களைக் கூறுவார்.<br>• தகவல்கள், தரவுகள் அடிப்படையில் முடிவுக்கு வருவார்<br>• தகவல்/அபிப்பிராயம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1 தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார் | • உரைநடைகள்<br>- உரையாடல் பகுதி<br>- உரைச்சித்திரம்<br>- விவாதம்<br>- கட்டுரை<br>- சிறுகதை<br>- விவரணசித்திரம்<br>- நேர்காணல் | • உரையாடலில் பொருத்தமான விடயத்தினைத் தெளிவுடன் வெளிப்படுத்துவார்.<br>• ஒரு கருத்தினை விடயத் தெளிவுடன் விளக்குவார்.<br>• தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை மற்றவர்களிடம் எடுத்துக் கூறுவார்.<br>• பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்துக்களைப் பண்புடன் கூறுவார்.<br>• கலந்துரையாடலின் போது மற்றவர் பேசும் பேச்சை அவதானித்து, தமது கருத்துக்களை முன்வைப்பார்.<br>• எடுத்துக் கொண்ட விடயங்களைத் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் விபரிப்பார். | 07 |
| 3.0 பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப் படுத்திப் பேசுவார். | 3.1 பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப, நடித்துப் பேசுவார். | • நாடகங்கள்<br>• சிறு கதைகள்<br>• நாட்டார் பாடல்கள்<br>• தனி நடிப்பு | • பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடன் உரையாடுவார்.<br>• பொருத்தமான தொனி, முகபாவம், அங்க அசைவுகளுடன் உரையாடி நடிப்பார்.<br>• ஏனையோருடன் ஒத்திசைவாகச் சேர்ந்து நடிப்பார்.<br>• கருப்பொருள் வெளிப்படும் வகையில் இயல்பாக நடிப்பார்.<br>• நடிக்கும் உத்தியினைப் பிறருக்கு சொல்லிக் கொடுப்பார். | 06 |
| | 3.2 பாவனை செய்து பேசுவார். | • அறிவிப்புகள்<br>• நிகழ்ச்சித் தொகுப்புக்கள்<br>• விளம்பரங்கள்<br>• கதைகள்<br>• சுயசரிதை<br>• நேர்முக வர்ணனை | • பாவனை செய்யும் திறனைப் பெறுவார்.<br>• பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.<br>• ஒரே சமயத்தில் ஒருவர் பல்வேறுபட்ட பாத்திரங்களின் தொனியை ஏற்றுப் பேசுவார்.<br>• நிகழ்ச்சிகளைத் தொகுத்து அவையினை விளித்து, தொனி வேறுபாடுகளுடன், சரளமாகப் பேசுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0<br>தமது எண்ணங் களை, கேட்போர் உளங் கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். | 4.1<br>ஆக்கத் திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். | • செய்யுள்கள்<br>• முடிவுபெறாத கதைகள்<br>• சம்பவ விபரிப்பு<br>• அனுபவக் கட்டுரைகள்<br>• சொற்பொழிவுகள் | • வழங்கப்படும் விடயத்தை தொடர்ந்து விரித்துக் கூறுவர்.<br>• கொடுக்கப்பட்ட விடயத்தினைத் தெளிவாகக் கூறுவார்.<br>• வழங்கப்படும் சொல், சொற்றொடர்களை விபரித்துக் கூறுவார்.<br>• விடயங்களைத்தொடர்புபட தெளிவாகக் கூறுவார்.<br>• பிறருக்கு விளங்கும் வகையில் கூறுவார்.<br>• தாம் பெற்ற அனுபவங்களை பிறருக்கு விளக்கிக் கூறுவார். | 03 |
| | 4.2<br>எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு, பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- கதைகள்<br>- கட்டுரைகள் | • பொருத்தமான தலைப்பினைத் தெரிவு செய்வார்.<br>• சட்டகத்தினை அமைப்பார்.<br>• தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.<br>• நோக்கத்துக்கும் சபைக்கும் ஏற்றவாறு பேசுவார்.<br>• பொருத்தமான முகபாவம், தொனி, நேரக் கட்டுப்பாடுகளை அனுசரித்துப் பேசுவார்.<br>• முக்கிய கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து, தர்க்கித்துப் பேசுவார்.<br>• பழமொழிகள், உவமைகள் போன்றவற்றைக் கையாண்டு பேசுவார். | 03 |

# வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 5.0<br>ஆக்கபூர்வமான செயல் திறன் உடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1<br>விடயத்தெளி வோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | • செய்யுள்கள்<br>- கவிதைகள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- நாடகங்கள் | • வாசிப்புப் பொறிமுறைத் திறன்களை அனுசரித்து வாசிப்பார்.<br>• தெளிவாக உச்சரித்து, ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப வாசிப்பார்.<br>• தொனி பேதங்களுடன், உரிய வேகத்தில் வாசிப்பார்.<br>• சொற்களைப் பொருத்தமுறச் சேர்த்தும் பிரித்தும் வாசிப்பார்.<br>• குறிகளை அனுசரித்து வாசிப்பார்.<br>• ஆக்கங்களின் அமைப்பை அனுசரித்து,ஆழமாக வாசிப்பார்.<br>• பிறருக்கு விளங்கும் வகையில் வாசிப்பார். | 04 |
| 6.0<br>கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1<br>மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | • செய்யுள்கள்<br>- கவிதைகள்<br>• உரைநடைகள் | • பிரதான கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறுவார்.<br>• வாசித்த பகுதியைச் சுருக்கி, சொந்த மொழிநடையில் கூறுவார்.<br>• அரும்பதங்களை அறிந்து கூறுவார்.<br>• பாத்திரங்களின் இயல்புகளைக் கூறுவார்.<br>• பெற்றுக் கொண்ட படிப்பினைகளை முன்வைப்பார்.<br>• படைப்புக்களின் ஊடாக, ஆசிரியரின் கருத்துக்களை அறிந்து கூறுவார்.<br>• படைப்பின் பின்னணி, மொழிநடை பற்றிக் கூறுவார். | 03 |
| | 6.2<br>பல்வேறு நோக்கங்களுக் காக வாசிப்பார். | • செய்யுள்கள்<br>(நீதி நூல்கள்)<br>• உரைநடைகள்<br>- கடிதம்<br>- அழைப்பிதழ்<br>- துண்டுப்பிரசுரம் | • தகவல்களைச் சேகரிப்பார்.<br>• சேகரித்த தகவல்களை வாசிப்பார்.<br>• நடைமுறைத் தேவைகளுக்கான ஆக்கவடிவங்களின் அமைப்பை அறிந்துகொள்வார்.<br>• பல்வேறு விடயங்களை முன்வைப்பார்.<br>• மதிப்பீடு செய்துகொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0<br>இரசனைக்காகவும் ஆக்கத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1<br>படைப்புக்களை வாசித்து நயப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- நாடகங்கள் | • படைப்புக்கள் பற்றி அறிந்துகொள்வார்.<br>• படைப்பின் உள்ளடக்கம் பற்றி அறிந்துகொள்வார்.<br>• படைப்பின் நுட்பங்களை அறிந்துகொள்வார்.<br>• செய்யுள்களில் அணி, ஓசைநயம், குறியீடு, கற்பனை, படிமம் முதலியன பற்றி அறிந்துகொள்வார்.<br>• சிறுகதை, நாடகம், முதலானவற்றின் களம், பாத்திரங்கள், சமூகப் பின்னணி முதலானவை பற்றி அறிவார்.<br>• விழுமியக் கருத்துக்களை அறிந்து கொள்வார்.<br>• அதன்மூலம் வரும் படிப்பினைகளை உணர்ந்து கொள்வார். | 13 |

# எழுத்து

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறி முறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். | 8.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தி யாக எழுதுவார். | • எழுதுதல் (பயிற்சி)<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள் | • எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி, சுயமாக எழுதுவார்.<br>•தெளிவாக எழுதுவார்.<br>• எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளி யுடன் எழுதுவார்.<br>• நேர்த்தியாக எழுதுவார்.<br>• நிறுத்தக் குறியீடுகளிட்டு எழுதுவார். | 02 |
| | 8.2 அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | • சொற்கள்<br>• சொற்றொடர்கள்<br>• வாக்கியங்கள்<br>• பந்திகள்<br>• சிறுகதைகள்,<br>• சிறுகட்டுரைகள்,<br>• பாடல்கள்,<br>• விடுகதைகள்,<br>• பழமொழிகள் | • அவதானமாகக் கேட்டுக் கிரகித்து எழுதுவார்.<br>• ஏற்ற வேகத்துடன் எழுதுவார்.<br>• வரிவடிவத்தை அனுசரித்து எழுதுவார்.<br>• ஒலி வேறுபாடுகளை அனுசரித்து எழுதுவார்.<br>• பிழையின்றி எழுதுவார்.<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகக் கையாளுவார். | 02 |
| 9.0 வாசித்துக் கிரகித்த வற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- கதைகள்<br>- கடிதங்கள்<br>- உரைச்சித்திரம்<br>- கட்டுரைகள்<br>- உரையாடல்கள்<br>• நாடகங்கள்<br>• நாட்டார் பாடல்கள் | • கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• சுருக்கியும் விரித்தும் எழுதுவார்.<br>• படைப்புக்களிலுள்ள சிறப்புக்களை எழுதுவார்.<br>• வாசித்தவிடயம்தொடர்பான அபிப்பிராயத்தை எழுதுவார்.<br>• அதனை ஒழுங்காகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• விமர்சனம் செய்து எழுதுவார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 10.0 எழுத்தாக்க நுட்பங் களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார். | 10.1 வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | • உரைநடைகள்<br>• பயிற்சி<br>- வாக்கியம் அமைத்தல் | • எழுவாய், பயனிலை இயைபுடன் எழுதுவார்.<br>• வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>• திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றுக்கேற்ப எழுதுவார். | 04 |
| | 10.2 கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | • உரைநடைப் பகுதி<br>- பந்தி<br>- கட்டுரைகள்<br>- பத்திரிகைகள் | • கருத்துப் புலப்பட பந்தியை எழுதுவார்.<br>• தலைமைப் பொருளை எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• கருத்துத் தொடர்புடன் எழுதுவார்.<br>• வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>• ஒழுங்கு முறையில் எழுதுவார்.<br>• நேர்த்தியாக எழுதுவார்.<br>• நிறுத்தக் குறியீடுகள் இடுவார்.<br>• பந்தி அமைக்கும் முறையை அறிந்துகொள்வார்.<br>• பிரதான கருத்தை விரித்துரைப்பார்.<br>• எடுத்துக்காட்டு, மேற்கோள் என்பவற்றைப் பயன்படுத்துவார்.<br>• நியாயம் காட்டுவார்.<br>• தர்க்கிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 11.0 படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை சுயமாக எழுதுவார். | 11.1 பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | • செய்யுள்கள்<br>- பாடல்கள்<br>• உரைநடைகள்<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- உரையாடல்கள்<br>- உரைச்சித்திரம்<br>• நாடகங்கள் | • ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற எழுதுவார்.<br>• அவதானிப்புகள், அனுபவங்கள், சிந்தனைகளை அனுசரித்து எழுதுவார்.<br>• பந்திகளைத் தொடர்புபட அமைப்பார்.<br>• தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எழுதுவார்.<br>• பொருத்தமான மொழிநடையில் எழுதுவார்.<br>• வாசிப்போருக்குப் புரியும் வகையில் எழுதுவார். | 04 |
| | 11.2 நடைமுறைத் தேவைகளுக் காக எழுதுவார். | • கட்டுரை<br>• கடிதம்<br>• அழைப்பிதழ்<br>• விளம்பரம்<br>• அறிக்கை<br>• துண்டுப்பிரசுரம்<br>• செய்திகள்<br>• பத்திரிகை<br>• வானொலி<br>• தொலைக்காட்சி<br>• மேடைப்பேச்சு<br>• வரவேற்புரை<br>• தலைமையுரை<br>• பாராட்டுரை<br>• நன்றியுரை<br>• விமர்சனம்<br>• விவாதம்<br>• நேர்காணல் | • அமைப்பு பொருத்தமாக இருக்குமாறு எழுதுவார்.<br>• தலைப்புக்கு / கேட்கப்பட்ட விடயத்துக்குப் பொருத்தமாக எழுதுவார்.<br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் தொடர்ச்சி யாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• கேட்டுக் கிரகித்து எழுதுவார்.<br>• இலக்கண வழுவின்றி எழுதுவார்.<br>• தர்க்கித்து எழுதுவார்.<br>• விருப்பை ஏற்படுத்தும் வகையில் எழுதுவார்.<br>• உணர்வைத் தூண்டும் வகையில் எழுதுவார்.<br>• பண்புடன் எழுதுவார்.<br>• விமர்சனம் செய்து எழுதுவார்.<br>• மற்றவருக்கு விளங்கும் வகையில் எழுதுவார். | 09 |

## மொழிவளம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 12.0<br><br>சொற்களஞ்சி யத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1<br><br>சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- நாடகங்கள்<br>• விவாதம் | • சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து பிரயோகிப்பார்.<br>- ஒத்த கருத்துச் சொல்<br>- எதிர்க் கருத்துச் சொல்<br>- ஒரு சொல் பல பொருள்<br>- பல சொல் ஒரு பொருள்<br>- மரபுச்சொற்கள்<br>- கலைச்சொற்கள்<br>- பிரதேச வழக்குச் சொற்கள்<br>- திசைச் சொற்கள்<br>- திரி சொற்கள்<br>• அரும்பதங்களை பொருத்தமாகப் பிரயோகிப்பார்.<br>• முன்னொட்டு, பின்னொட்டுக்ளை சொல்லாக்கத்திற்கு ஏற்ப பிரயோகிப்பார்.<br>• சொற்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 06 |
| | 12.2<br>சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை | • சொற்றொடர்களின் இயல்பு, பொருள், வகை என்பவற்றை அறிந்து பிரயோகிப்பார்.<br>- மரபுத் தொடர்கள்<br>- உவமை, உருவகம்<br>- இரட்டைக்கிளவி<br>- இணைமொழி<br>- அடுக்குத் தொடர்<br>• சொற்றொடர்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 15 |
| 13.0<br>மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.1<br>எழுத்துக்களின் ஒலிப்பு முறை யையும் வகைதொகை யையும் அறிந்து, பயன்படுத்துவார். | • செய்யுள்<br>• உரைநடை | • எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- குறில், நெடில்<br>- ர, ற, / ல, ள, ழ / ந, ண, ன<br>• எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து பயன்ப:த்துவார்.<br>- உயிரெழுத்து<br>- மெய்யெழுத்து<br>- உயிர் மெய்யெழுத்து<br>- ஆய்த எழுத்து | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 13.2<br>சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• கவிதை<br>• பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>- உரையாடல்<br>- உரைச்சித்திரம்<br>- பொருத்தமான<br>- உரைப்பகுதிகள் | • சொற்களின் வகையை அறிந்து பிரயோகிப்பார்.<br>- பெயர்ச் சொல்<br>- வினைச் சொல்<br>• இணைப்பிடைச் சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.<br>• கலைச் சொற்களை அறிந்து பிரயோகிப்பர்.<br>• சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் பிரயோகிப்பார். | 13 |
| | 13.3<br>சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, பிரயோகிப்பார். | • பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>- உரைச்சித்திரம்<br>- உரையாடல் | • சொற்றொடர், வாக்கியங்கள் என்பவற்றின் வகையை அறிந்து பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களின் இயல்பை அறிந்து பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களை இயைபுறப் பிரயோகிப்பார்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>- திணை, பால், எண், இடம், காலம்<br>- அடைமொழிகள்<br>• சொற்புணர்ச்சிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார். | 17 |
| | 13.4<br>நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பர் | • செய்யுள்<br>• பொருத்தமான உரைப் பகுதிகள் | • நிறுத்தக் குறிகளை பொருத்தமுறப் பிரயோகிப்பார்.<br>- முற்றுப்புள்ளி<br>- காற்புள்ளி<br>- வினாக்குறி<br>- வியப்புக்குறி<br>- அடைப்புக்குறி<br>- மேற்கோள் குறி | 02 |

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பாடத்திட்டம்

## தரம் - 10

( 2015 இலிருந்து நடைமுறைப்படுகின்றது )

தமிழ் மொழித்துறை

தேசியகல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

www.nie.lk

## 1. அறிமுகம்

எவ்விடயத்தைப் பொறுத்தவரையிலும் காலத்துக்கேற்ற மாற்றங்கள் தவிர்க்கமுடியாதனவே. அவ்வகையில் மொழியும் மொழிமூலமான ஆக்கங்களும் மொழி கற்றல் - கற்பித்தல் முறைகளும் மாற்றம் பெறுவது தவிர்க்க இயலாதது.

இவ்வுண்மையை மனங்கொண்டே கலைத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் மறுசீரமைக்கப்படுகின்றன. அவ்வகையில் தற்காலத்துக்கேற்றதாக மாணவரிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில், கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக இக்கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

10 ஆம் தரத்துக்குரிய **'தமிழ்மொழியும் இலக்கியமும்'** பாடத்துக்கான இப்புதிய கலைத்திட்டமானது 2015ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருகின்றது. இப்பாடத்திட்டத்தில் கேட்டலும் பேச்சும், வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித் திறன்களை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களின் வயதுக்குரிய கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

பயன்பாட்டு இலக்கணமும் மொழிவளமும் தனித்தனித் தேர்ச்சிகளாக வழங்கப்பட்டிருப்பினும், அடிப்படை மொழித் திறன்களை மையமாகக் கொண்டு கற்கும் போதே இவற்றையும் தொடர்புபடுத்திக் கற்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. அதாவது இலக்கணத்தைத் தனித்துக் கற்பிக்காது பாடத்தின் (Text) ஊடாகக் கற்பித்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

10 ஆம் தரத்துக்குரிய **'தமிழ்மொழியும் இலக்கியமும்'** பாடத்துக்கான தேர்ச்சிகள், மாணவர்கள் மொழியைச் செம்மையாக, ஆக்கபூர்வமாகக் கையாள்வதற்கும் பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கிக் கொள்வதற்கும் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து, அவற்றை மேம்படுத்தி சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கான தகுதியைப் பெறுவதற்குமான அடிப்படையை வழங்க வல்லனவாகும்.

அத்தேர்ச்சிகளை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்ட இக்கலைத்திட்டத்துக்கான செயற்பாடுகள் யாவற்றையும் பிரதிபலிப்பதாகப் பாடப்புத்தகம் அமையும் என எதிர்பார்க்கமுடியாது. எனவே, ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் மாத்திரம் கவனம் செலுத்தாது கலைத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி, அதன் மூலம் பெற்ற தெளிவோடு, ஏற்ற கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**7. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 4. பாடத்திட்ட நோக்கங்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற்கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- பரீட்சை நோக்கில் மட்டுமன்றி, பெற்ற மொழியறிவை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கையாளும் திறனை வளர்த்தல்
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார, பண்பாட்டு பாரம்பரிய, விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணுதல்.
- கலைகள், அறிவியல், தகவல் தொழில்நுட்பத் துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கு மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் திறனைப் / ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து, ஆக்கங்களைப் படைக்கவும் மொழியைச் சிறப்பாகக் கையாளவும் சுவைக்கவும் முழு ஆற்றல் பெறுதல்.
- தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பிறரிடம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உணர்ச்சிகளை வெளியிடவும் மொழியைக் கையாளும் திறனையும் பெற்றிருத்தல்
- மாணவரின் ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்களை விருத்தி செய்வதோடு, சிந்தனைத் திறனையும் மேம்படுத்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதகமாகக் கொள்ளல்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அறிமுகம் | 02 |
| 02. | தேசிய இலக்கு | 03 |
| 03. | அடிப்படைத் தேர்ச்சிகள் | 04 |
| 04. | பாடத்திட்ட நோக்கங்கள் | 06 |
| 05. | பாடத்திட்டம் | 07 |

# கற்றல் - கற்பித்தற்

# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

## முதலாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 9.0 | 9.1 | நீதிப்பாடல்கள் | 10 | 2 |
| 2 | 1.0 | 1.1 | லகர, ளகர, ழகர / ணகர, னகர, நகர / ரகர, றகர<br>எழுத்துக்களை உரிய ஒலி வேறுபாட்டுடன் உச்சரித்தல். | 2 | 5 |
| 3 | 12.0 | 12.1 | சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிதல்<br>ஒத்த கருத்துச் சொற்கள்<br>எதிர்க் கருத்துச் சொற்கள் | 2 | 7 |
| 4 | 12.0 | 12.1 | ஒரு சொல் பல பொருள்<br>பல சொல் ஒரு பொருள் | 2 | 9 |
| 5 | 13.0 | 13.1 | எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிதல்<br>குறில், நெடில்<br>ரகர, றகர வேறுபாடுகள்<br>லகர, ளகர, ழகர வேறுபாடுகள்<br>நகர, னகர, ணகர வேறுபாடுகள் | 4 | 11 |
| 6 | 13.0 | 13.3 | அடைமொழிகள் | 1 | 13 |
| 7 | 5.0 | 5.1 | நாவலர் எழுந்தார். | 4 | 15 |
| 8 | 11.0 | 11.2 | கடிதம் எழுதுதல்<br>உறவு முறைக் கடிதம் | 2 | 17 |
| 9 | 11.0 | 11.2 | கடிதம் எழுதுதல்<br>தொழின்முறைக் கடிதம் | 2 | 19 |
| 10 | 13.0 | 13.4 | நிறுத்தக் குறிகள் | 2 | 21 |
| 11 | 12.0 | 12.2 | பிரதேச வழக்குச் சொற்கள் | 2 | 23 |
| 12 | 3.0 | 3.2 | விளம்பரம் எழுதுதல் | 3 | 25 |
| 13 | 12.0 | 12.1 | திரி சொற்கள் | 1 | 28 |
| 14 | 12.0 | 12.1 | திசைச் சொற்கள் | 1 | 31 |
| 15 | 12.0 | 12.2 | தொடர்மொழிக்கு ஒரு மொழி | 2 | 33 |
| 16 | 11.0 | 11.2 | துண்டுப்பிரசுரம் | 2 | 35 |
| 17 | 12.0 | 12.2 | மரபுத் தொடர்கள் | 1 | 37 |
| 18 | 12.0 | 12.2 | மரபுப்பெயர் / மரபுச் சொற்கள | 2 | 39 |
| 19 | 6.0 | 6.1 | பாரதியார் கவிதைகள் - (சுயசரிதை 9-13 ) | 3 | 41 |

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : நீதிப் பாடல்கள்.

**பாடவேளை** : 10

**கற்றற் பேறுகள்**

- பாடல்களைப் பதம் பிரித்துக் கொண்டு கூட்டி வாசித்துக் காட்டுவார்.
- பாடல்களின் பொருளைக் கூறுவார்.
- பாடல்களில் வரும் கடின பதங்களுக்குப் பொருள் எழுதுவார்.
- பாடல்களில் காணப்படும் அணிகளை விளக்கி எழுதுவார்.
- பாடல்களை இசையுடன் ஓதுவார்.
- பாடல்களைப் பாடிய ஆசிரியர்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்து வழங்குவார்.
- பாடல்கள் கூறும் நீதிக் கருத்துக்களை ஏற்று நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாட அறிமுகமொன்றினை மேற்கொள்ளல்.
- பாடல்களைப் பதம் பிரித்து வாசித்துக்காட்டி, மாணவரை வாசிக்கச் செய்தல்.
- பாடலிலுள்ள அரும்பதங்களுக்குப் பொருள் கூறச் செய்தல்.
- பாடல்களுக்குப் பொருள் கூறச் செய்தல்.
- பொருளை எழுதியதன் பின்னர், அது தொடர்பாகக் கலந்துரையாடிப் பொருளைச் செம்மைப்படுத்தல்.
- பாடல்களிலுள்ள அணிகளை விளக்குதல்.
- குழுநிலையில் பாடல்களின் பொருளை இனங்கண்டு விளங்கச் செய்தல், எழுதச் செய்தல். குழுநிலையில் பாடல்களை இசையோடு பாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- விவேக சிந்தாமணி
  - தொகுப்பு நூல், தனித்துவமானது
  - பிற்காலத்து அறிஞர்களால் தொகுக்கப்பெற்றது
  - பல நூல்களிலிருந்து திரட்டப் பெற்ற பாக்களைக் கொண்டது
    தரப்பட்ட பாடலில் நல்லவர்களான அறிஞரை நல்லவர்களாலேதான் அறிய இயலுமாயிருக்கும் என்றும் எடுத்துக் கூறப்படுகிறது

- வெற்றி வேற்கை
  பாடியவர் - அதிவீரராமபாண்டியன்

- வாக்குண்டாம்
  பாடியவர் - ஔவையார்

- திரிகடுகம்
  - சங்க மருவிய கால நூல்
  - பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.
  - திரி - மூன்று
    கடுகம் - கடுகு (சுக்கு, திப்பிலி, மிளகு)
    இம் மூன்றும் உடலுக்குச் சுகமளிப்பது போல, திரிகடுகம் எனும் நூல் உயிருக்கு உறுதியளிக்கும்
  - இம் மூன்று விடயங்கள் இந்நூலின் பாடல்தோறும் கூறப்பட்டுள்ளன
  - 100 பாடல்கள் கொண்ட நூலாகும்
  - ஆசிரியர் - கணக்காயர்

  மூன்று அம்சம் கூறப்பட்டுள்ளது.
  i. ஆசிரியர் இல்லாத ஊர்.
  i. மூத்தோர் இல்லா அவை.
  ii. பகிர்ந்துண்ணும் குணமில்லார் அல்லதாய் இருத்தல்.

- முதுமொழி வெண்பா
  - இலங்கை அறிஞர் புலவர்மணி அல்-ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களால் பாடப் பட்டது
  - கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் மருதமுனை
  - வெண்பா வடிவம் (யாப்பு)
  - ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு முதுமொழி கூறப்படுகிறது
  - மனம் கொண்டதுதான் மாளிகை எனும் கருத்து வலியுறுத்தப்படுகிறது

- நாலடியார்
  - சமணமுனிவர்களால் இயற்றப்பட்டது
  - சங்க மருவிய காலம், பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று
  - நானூறு வெண்பாக்களைக் கொண்டது
  - நாற்பது அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது
  - ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப்பத்துப் பாடல்கள் உள்ளன

  பொருட்பாலில் வரும் 213வது பாடல் இங்கு தரப்பட்டுள்ளது. 22ஆம் அதிகாரம் - நட்பாராய்தல்.

- இனியவை நாற்பது
  - பதினெண் கீழ்க் கணக்கு நூல்
  - கடவுள் வாழ்த்துடன் 41 செய்யுள்களைக் கொண்டது
  - செய்யுள்கள் இன்னிசை வெண்பா யாப்பு
  - ஆசிரியர் - பூதஞ்சேந்தனார்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- டிமைன் தாள்
- பாடநூல்
- அகராதி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டு கூட்டி எழுதிக் காட்டுவார்.
- அரும்பதங்களுக்குப் பொருளை எழுதுவார்.
- பாடல்களின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதிக்காட்டுவார்.
- பாடலிலுள்ள அணிகளை விளக்குவார்.
- பாடல்கள் கூறும் நீதிக் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : எழுத்துக்களின் ஒலிப்புக்கு ஏற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** லகர, ளகர, ழகர / ணகர, னகர, நகர / ரகர, றகர எழுத்துக்களை உரிய ஒலி வேறுபாட்டுடன் உச்சரித்தல்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- எழுத்துக்கள் பிறக்கும் முறையை அறிவார்.
- ல,ள,ழ,ண,ன,ந,ர,ற ஆகிய எழுத்துக்களை அவற்றின் பிறப்பு முறையை அறிந்து உச்சரிப்பார்.
- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு சொற்களைச் சரியாக உச்சரிப்பார்.

**பாடத்தை திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- எழுத்தின் ஒலி வேறுபாட்டுக்கேற்ப மாணவர்கள் எழுத்துக்களை உச்சரிக்கச் செய்தல்.
- சொல்லட்டைகளைக் கொடுத்து சொற்களைச் சரியான முறையில் உச்சரிக்கச் செய்தல்.
- எழுத்துக்கள் சொற்களைச் சரியாக உச்சரித்துக் காட்டும் ஒலி நாடாவை ஒலிக்கவிட்டுச் செவிமடுக்கச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- கலை, களை, கழை
- உலவு, உளவு, உழவு
- அலை, அளை, அழை
- கன்று, கண்டு

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- டிமைன் தாள்
- பாடநூல்
- அகராதி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்.**

- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு உச்சரிப்பார்.
- சொற்களைச் சரியாக உச்சரிப்பார்.
- லகர, ளகர, ழகர, ணகர, னகர, நகர, ரகர, றகர எழுத்துக்களைக் கொண்ட சொற்களைத் தொகுப்பார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிதல்
- ஒத்த கருத்துச் சொற்கள்
- எதிர்க் கருத்துச் சொற்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து பிரயோகிப்பார்.
- இரண்டு வகையான சொற்களையும் தேடித் தொகுத்துத் துலங்குவார்.
- இரண்டு வகையான சொற்களையும் வெவ்வேறாக அட்டவணைப்படுத்துவார்.
- இரண்டு வகையான சொற்களின் பொருளை அறிந்து, ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஒத்த கருத்துச் சொல், எதிர்க் கருத்துச் சொல், என்பவற்றின் பயன்பாட்டை விளக்குதல்.
- ஒவ்வொரு வகைச் சொற்களினதும் பொருளையும் விளக்குதல்.
- ஒவ்வொரு வகைச் சொற்களையும் இனங்காணவும் அட்டவணைப்படுத்தவும் உதவுதல்.
- சொற்களை ஆக்கங்களில் பொருத்தமான இடங்களில் பயன்படுத்த வழிகாட்டல்.
- சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ள உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ) , எண்ணக்கருக்கள்**

**ஒத்த கருத்துச் சொற்கள்**

- ஒரு சொல் நின்று பொருள் தரும் இடத்தில் அச்சொல்லுக்குப் பதிலாக இன்னொரு சொல் அமைந்து அதே பொருளைத் தருமாயின் அச்சொல் ஒத்த பொருள் தரும் சொல் எனப்படும்.

  உ-ம்:

  அபூர்வம் - அருமை
  அகழ்தல் - தோண்டுதல்
  ஆசாரம் - ஒழுக்கம்
  கோலம் - அழகு
  யாக்கை - உடம்பு
  வைதல் - ஏசுதல்
  மெய் - உண்மை
  பேதை - அறிவிலி
  முத்து - நித்திலம்

**எதிர்க் கருத்துச் சொற்கள்**

- ஒரு சொல்லுக்கு எதிர்க் கருத்தைத் தருகின்ற சொல் எதிர்க் கருத்துச் சொல் எனப்படும்.

  உதாரணம் : நியாயம் - அநியாயம்
  சுத்தம் - அசுத்தம்
  ஆதரவு - அநாதரவு
  மானம் - அவமானம்
  மரியாதை - அவமரியாதை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இச் சொற்களைத் தேடித் தொகுப்பார்.
- மூன்று வகையான சொற்களையும் இனம் கண்டு வெவ்வேறாக அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களின் பொருளைச் செம்மையாக அறிந்து ஆக்கங்களில் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1**: சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஒரு சொல் பல பொருள்.
பல சொல் ஒரு பொருள்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- பல பொருள் தரும் ஒரு சொல்லை இனங்காண்பார்.
- ஒரு பொருள் குறித்த பலசொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இனங்கண்ட சொற்களைப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான முறையில் பிரயோகிக்கும் திறனைப் பெறுவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்யும் ஆற்றலைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் தெரிவு செய்தல்.
- சொற்களையும் பொருளையும் தனித்தனியாக டிமைன் தாளில் எழுதுதல்.
- ஒரே பொருளைத் தரும் சொற்களையும் பல பொருள் தரும் சொற்களையும் வேறு வேறாக எழுதுதல்.
- மாணவர்களுக்கு இவற்றுக்குரிய பயிற்சிகளைக் கொடுத்தல்.
- தாம் கற்ற பாடத்திலிருந்து இவ்வாறான சொற்களை இனங்காணச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- ஒரு பொருளானது பல சொற்களில் வழங்கி வருமாயின் அது ஒரு பொருள் பன்மொழியாகும்.
- ஒரு சொல்லானது பல பொருளில் வழங்கி வருமாயின் அது பல பொருள் ஒரு மொழி எனப்படும்.

  நூல் - ஆடையாக்கி தைக்கும் நூல், புத்தகம், சாஸ்திரம்

  கிளை - கொப்பு, கூட்டம், சுற்றம், மூங்கில்

  வீடு - மனை, அகம், விடுதலை, படைப்பு, வினைநீக்கம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- டிமைன்தாள்
- வீடியோ

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- ஒரு பொருள் பல சொல் கொண்ட சொற்களைத் தேடித்தொகுப்பார்.
- பல பொருள் ஒரு சொல் கொண்ட சொற்களைத் தேடித்தொகுப்பார்.
- அவற்றுக்கான பொருள்களையும் அறிவார்.
- இவற்றை ஆக்கங்களில் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.1** : எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகைதொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிதல்.

- குறில், நெடில்
- ரகர, றகர வேறுபாடுகள்
- லகர, ளகர, ழகர வேறுபாடுகள்
- நகர, னகர, ணகர வேறுபாடுகள்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து அவற்றைச் சரியாகப் பிரயோகிப்பார்.
- ர, ற, ல, ள, ழ, ன, ண, ந எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து உச்சரிப்பார்.
- ரகர, றகர, டகர, லகர, ளகர, ழகர, னகர, ணகர, நகர ஒலிப்பு முறைகளை அறிந்து பிரயோகிப்பார்.
- ஒலிப்பில் வேறுபடும் சொற்களை வாக்கியங்களில் வைத்து (பொருள் புலப்பட) எழுதுவார்.
- குறில், நெடில் வேறுபாடுகளை அறிந்து சொற்களை, வாக்கியங்களில் அமைத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப் பிரவேசம்.
- ஒலிப்பில் வேறுபடும் எழுத்துத் தொகுதிகளைக் கொண்ட சொல்லட்டைகளை உருவாக்கி மாணவர்களை வாசிக்கச் செய்தல் / உச்சரிக்கச் செய்தல்.
- சரியாக உச்சரிக்கும் முறையினை மாணவர்க்கு விளக்குதல்.
- அவ்வாறு உச்சரிக்க பயிற்சி பெறச் செய்தல்.
- பொருள் புலப்பட வாக்கியங்களை அமைக்கும் பயிற்சியை வழங்கல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒலிப்பில் வேறுபடும் எழுத்துத் தொகுதிகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி அவற்றை முன்வைக்க இடமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- **குறில் - குறுகிய ஓசை உடையன**

  **உயிர்க் குறில்**

  அ, இ, உ

  **உயிர் மெய்க்குறில்**

  க, கு, கெ

- **நெடில் - நீண்டு ஒலிப்பன**

  **உயிர் நெடில்**

  ஆ, ஈ, ஏ

  **உயிர் மெய் நெடில்**

  கா, கீ, கூ

**தரவிருத்தி உள்ளீடுகள்**

சொல்லட்டைகள், பயிற்சிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- ஒலிப்பு முறையைத் திருத்தமாக அறிந்து கூறுவார்.
- ஒலிப்பு முறையை உச்சரித்துப் பழகுவார்.
- ஒலிப்பில் வேறுபடும் சொற்களைப் பயன்படுத்தி, பொருள் புலப்பட வாக்கியங்களை அமைப்பார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : அடைமொழிகள்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள்**

- ஒருவருடைய எண்ணம், கருத்துக்கள், உணர்ச்சிகளை முழுமையாகப் புலப்படுத்துவது வாக்கியமாகும் என்பதை அறிந்து கூறுவார்.
- வாக்கியத்தின் உறுப்புக்களான எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை விசேடித்துக் கூறும் சொற்கள், சொற்றொடர்களே அடைமொழிகள் என்பதை அறிந்து பயன்படுத்துவார்.
- அடைமொழிகள் எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி என மூன்று வகைப்படுமென எடுத்துக் கூறுவார்.
- பேசும் பொழுதும் எழுதும்பொழுதும் அடைமொழிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் பற்றி மாணவர் முன்பு கற்றவற்றை வினா விடை மூலமாகக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதி, அவற்றின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை இனங்காணச் செய்து அவற்றுக்குப் பொருத்தமான. அடைமொழிகளைக் கலந்துரையாடி மாணவர் கூறும்படி செய்தல்.
- செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்கி, கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளுக்கு விடை எழுதும்படி தூண்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ) , எண்ணக்கருக்கள்**

- ஒருவருடைய எண்ணம், கருத்து, உணர்ச்சிகளை முழுமையாகப் புலப்படுத்துவது வாக்கியமாகும்.
- வாக்கியத்தின் அடிப்படை உறுப்புக்கள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன.
- இவற்றினை விசேடித்துக் கூறும் சொற்கள், சொற்றொடர்களே அடைமொழிகள்.
- இவை எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி என மூன்று வகைப்படும்.

உ-ம்:

1. வானம் மழையைப் பொழிந்தது.
   கருமேகம் சூழ்ந்த வானம், திரண்டு வந்து மழையை அள்ளிப் பொழிந்தது.
2. பூனை பாலைக் குடித்தது.
   கறுப்புப் பூனை காய்ச்சி வைத்த பாலை நக்கிநக்கிக் குடித்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- செயற்பாட்டுப் பத்திரம்
- டிமைன் தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கியத்தின் உறுப்புக்களை விளங்கிக் கூறுவார்.
- வாக்கிய உறுப்புக்களை விசேடித்துக் கூறும் சொற்கள் சொற்றொடர்களே அடைமொழிகள் என இனங்கண்டு வகைப்படுத்துவார்.
- அடைமொழிகள் மூன்று வகைப்படும் என்பதை எடுத்துக்கூறுவார்.
- பேசும் போதும், எழுதும் போதும் அடைமொழிகளை பொருத்தமாக உபயோகிப்பார்.

**தேர்ச்சி 5.0** : ஆக்கபூர்வமான செயல் திறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நாவலர் எழுந்தார்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- ' நாவலர் எழுந்தார் ' எனும் கட்டுரையை வாசித்துப் பொருள்கொள்வார்.
- அக்கட்டுரை தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.
- பிரதான கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- துணைக் கருத்துக்களைச் சுருக்கியும் விரித்தும் கூறுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான விடயங்களை - அபிப்பிராயத்தை ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.
- மொழிநடை, எடுத்துரைப்புமுறை என்பனவற்றை அறிந்து பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோனைகள்**

- ஒவ்வொரு மாணவரும் கட்டுரையை வாசித்துக் கிரகிக்க வழிகாட்டுதல்.
- வாசித்துக் கிரகித்தவற்றை குறிப்பு எழுதச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வினாக்களை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் இயங்கச் செய்து வழிகாட்டல்.
- கட்டுரையின் தலைமைக் கருத்து, துணைக் கருத்துக்களை இனங்கண்டு எழுதச் செய்தல்.
- கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- கட்டுரை ஆசிரியர் பற்றிய விபரம்
- கட்டுரை ஆசிரியரின் நோக்குப் பற்றிய விடயம்
- கூட்டம் நடைபெற்ற இடம்
- கூடியவர்களின் வாதப் பிரதிவாதங்கள்
- தலைமை வகிக்க வேண்டியவர் தலைமை வகித்தமைக்குக் காரணங்கள்
- சென்னை சர்வகலாசாலையில் முதன்முதல் நடத்திய பி.ஏ பரீட்சையில் சித்தியடைந்த வை. விசுவநாதபிள்ளை, சி.வை தாமோதரம்பிள்ளை
- வை. விசுவநாதபிள்ளையின் நிலைமைகள்
- தலைமை தாங்கியவர் - வை. விசுவநாதபிள்ளை
- சேர்.பொன் - இராமநாதன்துரையின் தோற்றப் பொலிவு
- பிறிற்றோ பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்

- கூட்டரசின் நோக்கம்
- வாதமகாசபை
- வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள்
- விசுவநாதம்பிள்ளையின் தளர்ச்சி
- நாவலர் எழுந்த நிலை 'விலகு பிள்ளை'
- நாவலர் அவர்களின் நிலை
    - கம்பீரமான தோற்றம்
    - வீறு கொண்ட பார்வை
    - எண்ணங்களின் வேகம்
- நாவலர் எழுந்து எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுகளை என்ற பின் நிலவிய அமைதி
- அந்த நாட்களில் நல்லூர் கந்தசுவாமி கோயிலார்க்கும் பிராமணர்களுக்கும் நடந்த வழக்கு
- கோயிலார்க்குச் சார்பாக - பிறிற்றோ
  பிராமணர்க்குச் சார்பாக - ஆறுமுகநாவலர்
- பிறிற்றோவின் தந்திரம்
- ஆறுமுகநாவலர் அம்பலப்படுத்தல்
- பிறிற்றோ தக்கவரல்லர் என்பது நிரூபணம்
- சேர் பொன் இராமநாதன் தக்கவர்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- ஆறுமுகநாவலர் பற்றிய படங்கள்
- எழுதுதாள்கள், எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையை வாசித்து அது தொடர்பான விடயங்களை முன்வைப்பார்.
- கட்டுரை தொடர்பான கேள்விகளுக்கு விடையளிப்பார்.
- பிரதான கருத்துக்களையும் துணைக்கருத்துக்களையும் எழுதிக்காட்டுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான விடயங்களை ஆக்கங்களில் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : கடிதம் எழுதுதல்.
- உறவு முறைக் கடிதம்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- படைப்பாக்கங்களை இனங்கண்டு துலங்குவார்.
- கடிதத்தின் வகை, பிரதான உறுப்புக்களைப் பற்றி பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- கடிதம் எழுத வேண்டிய நோக்கங்களை எடுத்துக் கூறுவார்.
- பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- உறவுமுறைக் கடிதத்தின் பயன்பாட்டினை உணர்ந்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கடிதம் எழுதும் நோக்கம், சந்தர்ப்பம், கடிதத்தின் வகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- கடிதத்தின் வகை, பயன்பாடுகள் பற்றி மாணவருக்கு எடுத்துக் கூறுதல்.
- கடிதத்தின் சட்டகத்தை அமைத்தல்.
- கடிதத்தின் பிரதான உறுப்புக்களை விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி மாதிரிக் கடிதங்களை எழுதுவித்தல்.
- கடித மாதிரிகளை முன்வைத்தல், அவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- கடிதத்தின் பயன்பாடுகள்.
  - உறவு நிலைகள் வலுப்படுதல்.
  - கருத்துப்பரிமாற்றத்துக்கு உதவுதல்.
  - ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளல்.
  - தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.
- கடித வகைகள்.
  1. உறவு முறைக் கடிதம்.
  2. தொழில் முறைக் கடிதம்.
- கடித உறுப்புக்கள்.

**உறவுமுறைக் கடிதம்**

Ⅰ அனுப்புபவரின் முழு முகவரியும், திகதியும் (வலதுபக்க மேல் மூலையில்)

24, பிரதான வீதி,<br>கொழும்பு - 3<br>12.06.2014.

Ⅱ. விளிப்பு

1. அன்புள்ள அம்மா, 2. அருமை நண்பா,

Ⅲ. செய்தி

(அ) நலம் விசாரித்தல்<br>(ஆ) உள்ளடக்கச் செய்தி

Ⅳ. முடிப்பு

எழுதுபவருக்கும் பெறுபவருக்கும் இடையிலான தொடர்பு

உதாரணம் : உங்கள் அன்பு மகன்<br>அருமை நண்பன்

Ⅴ. ஒப்பம்

கையெழுத்துக்குப் பின் நிறுத்தற்குறி எதுவும் எழுதப்படுவதில்லை.

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கடிதத்தின் வகை, பிரதான உறுப்புக்களைப் பற்றி பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- கடிதத்தினை பிழையின்றி எழுதிக் காட்டுவார்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : கடிதம் எழுதுதல்.
- தொழின்முறைக் கடிதம்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- தொழின்முறைக் கடித வகைகளை அறிந்து கூறுவார்.
- உறவுமுறைக் கடிதத்திற்கும் தொழின்முறைக் கடிதத்திற்குமிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறும் திறனைப் பெறுவார்.
- தொழின்முறைக் கடிதம் ஒன்றின் அமைப்பினை விளக்கிக் கூறுவார்.
- இக்கடிதத்தின் பிரதான உறுப்புக்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- தொழின் முறைக் கடிதம் ஒன்றை எழுதிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கடிதத்தின் வகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- மாதிரிச் சட்டகமொன்றை அமைக்கச் செய்தல்.
- தொழின்முறைக் கடிதமொன்றைக் காட்சிப்படுத்தி அதன் அமைப்பு, உறுப்புக்கள், நிறுத்தற் குறிகள் பற்றி விளக்கல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு வகையான தொழின்முறைக் கடிதங்களை எழுதுவித்தல்.
- மாணவர்களால் எழுதப்பட்ட கடிதங்களை முன்வைக்கச் செய்தல்.

- இது தொடர்பாகக் கலந்துரையாடி விளக்கமளித்தல்.
- மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ) , எண்ணக்கருக்கள்**

- தொழின்முறைக் கடிதத்தின் பயன்பாடுகள்.
  - கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுதல்.
  - தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.
- கடித உறுப்புக்கள்.
  - முகவரி
  - உள் முகவரி
  - விளிப்பு
  - தலைப்பு
  - விடயம்
  - முடிப்பு
  - ஒப்பம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரிக் கடிதங்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தொழில் முறைக் கடிதம் பற்றிக் கூறுவார்.
- தொழில்முறைக் கடிதம் எழுதப்படும் சந்தர்ப்பங்களை விளக்குவார்.
- கொடுக்கப்படும் விடயத்தைக் கருத்திற்கொண்டு தொழின்முறைக் கடிதம் எழுதுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.4 :** நிறுத்தற் குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** நிறுத்தற் குறிகள்.

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்**

- பொருள் நன்கு புலப்படுவதற்கு குறியீடுகள் உரியவாறு பயன்படத்தப்பட வேண்டுமென அறிந்து துலங்குவார்.
- நிறுத்தற் குறியீடுகளின் பயன்பாட்டை அறிந்து பிரயோகிக்கும் திறன் பெறுவார்.
- நிறுத்தற் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி தமது ஆக்கங்களை முன்வைப்பார்
- நிறுத்தற் குறிகளைப் செம்மையாகக் கையாளும் திறனைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- நிறத்தற் குறியீடுகளை அறிமுகம் செய்தல்.
- நிறுத்தற் குறிகளற்ற பந்தியொன்றை வழங்கி, நிறுத்தக் குறிகளை இடச்செய்து அவற்றின் பிரயோகத்தினை விளக்குதல்.
- குழு வேவைகளைத் திட்டமிட்டு, அவற்றினை வழங்குதல்.

**முதன்மைப் பதங்கங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

1. முற்றுப்புள்ளி ( . ) / முற்றுத் தரிப்பு / முடிப்பிசைக்குறி பயன்படும் சந்தர்ப்பங்கள்.
   i கூற்று, வியங்கோள், ஏவல் வாக்கியங்களின் இறுதியில்.
   ii. சொற்சுருக்கத்தின் இறுதியில்.
   i. கடித முகவரியின் இறுதியில்.
2. வினாக்குறி / வினாவிசைக்குறி ( ? )
   நீ

3. உணர்ச்சிக் குறி /மெய்ப்பாட்டுக்குறி ( ! )

i வியப்பு / இரக்கம் /வலி போன்ற உணர்ச்சி வெளிப்பாட்டுச் சந்தர்ப்பங்களில்

ii. ஒருவரை அல்லது ஒன்றை உணர்ச்சியுடன் விளிக்கும்போது.

உதாரணம் : பாரதியே ! நீ இன்று இருந்திருந்தால் ........

4. காற் புள்ளி / கால் மாதிரை / உறுப்பிசைக் குறி ( , )

தொடராக வருகின்ற சொற்களையும் சொற்றொடர்களையும் துணை வாக்கியங்களயும் பொருள் வியங்கும் வண்ணம் தனித்தனியாக பிரித்துக் காட்டுவதற்கு பயன்படும்.

5. முக்காற்புள்ளி / விளக்கிசைக்குறி ( ; )

i. பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று, அதன் விளக்கமாக அமையுயமிடத்து இடப்படும்.

6. மேற்கோட் குறி / அனுவாதக்குறி ( “ .............. ” )

i ஒருவருடைய கூற்றை அப்படியே மேற்கொண்டு எடுத்தாளும்போது மேற்கோட் குறி பயன்படும்.

7. அரைப்புள்ளி / தொடரிசைக்குறி ( ; )

i . தொடர்களைப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும்.

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- நிறுத்தற் குறிகளை உரியவாறு பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.
- நிறுத்தற் குறிகளின் பயன்பாட்டை அறிந்து துலங்குவார்.
- நிறுத்தற் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தித் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பிரதேச வழக்குச் சொற்கள்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- பிரதேச வழக்குச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- பிரதேச வழக்குச் சொற்கள் எவ்வெவ் பிரதேசத்திற்கு உரியவை என்பதை வேறுபடுத்திக் காடடும் திறன் பெறுவார்.
- பிரதேச வழக்குச் சொற்களைப் பொருத்தமாக இனங்கண்டு பிரயோகிப்பார்.
- பிரதேச வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தினைத் தெரிவு செய்தல்.
- பிரதேச வழக்குச் சொற்கள் அடங்கிய உரையாடல் ஒன்றினை வழங்கி, அந்த உரையாடலில் இச்சொற்களை இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட சொற்களின் பொதுவான பதத்தைக் கூறச் செய்தல்.
- பிரதேச வழக்குச் சொற்களின் இயல்பு, முக்கியத்துவம் பற்றி விளக்குதல்.

**முதன்மைப் பதங்கங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- பிரதேசத்துக்குரிய மண்வாசனைச் சொற்கள் பிரதேச வழக்குச் சொற்கள் எனப்படும்.
- பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுவதோடு, அவை பயன்பாட்டில் உள்ளன.
- வலிமையும் உயிர்ப்பும் உடையன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாட நூல்கள்
- டிமைன் தாள்
- கதைப் பகுதிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பிரதேச வழக்குச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- ஆக்கங்களில் உள்ள பிரதேச வழக்குக் சொற்களை குறிப்பிடுவார்.
- ஆக்கங்களில் பொருத்தமாக இவற்றைப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பாவனை செய்து பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : விளம்பரம் எழுதுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- படைப்பாக்கங்களை இனங்கண்டு துலங்குவார்.
- விளம்பரம் என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவார்.
- விளம்பரங்களில் இருக்க வேண்டிய அமிசங்களைப் பட்டியற்படுத்துவார்.
- விளம்பரம் செய்யும் முறைகளை அறிந்து கூறுவார்.
- விளம்பரம் ஒன்றை எழுதிக்காட்டுவார்.
- விளம்பரங்களால் ஏற்படும் விளைவுகளை அறிந்து அதனைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- விளம்பரம் என்றால் என்ன? ஏன் தேவைப்படுகின்றது? என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடி விளக்குதல்.
- மாதிரி விளம்பரம் ஒன்றைக் காட்சிப்படுத்தல்.
- மாணவர்கள் தாம் அறிந்த விளம்பரங்களைக் கூற வழி நடத்துதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, விளம்பரங்களின் தேவை, அதனால் ஏற்படும் விளைவுகள், விளம்பரம் செய்யும் ஊடகங்கள், விளம்பரங்களில் அமைய வேண்டிய அம்சங்கள் என்பன பற்றிய குழுவேலைகளை வழங்குதல்.
  - மாதிரி விளம்பரம் ஒன்றை நிகழ்த்திக் காட்டுதல்.
  - மாணவர்களைக் குழுக்களாக்கி விளம்பரம் ஒன்றினை நிகழ்த்தச் செய்தல்.
- மாணவர் குழுச்செயற்பாடுகளை முன்வைத்தல், ஏனைய மாணவர் குழுக்களின் ஆலோசனைகளை வரவேற்றல்.
- தேவையான ஆலோசனை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- விளம்பரம் செய்வதற்கான காரணம் / நோக்கம்.
  - விற்பனையைப் பெருக்கல்
  - அறிமுகப்படுத்தல்
  - பிரசித்தப்படுத்தல்
  - தகவல் தெரிவித்தல்
  - பிரசாரப்படுத்தல் (சுகாதாரம் போன்றவை)

- விளம்பர வகை.
  1. வர்த்தகம் சார்ந்தவை
  2. சுகாதாரம், ஆரோக்கியம் சார்ந்தவை
  3. அரசியல் சார்ந்தவை

- விளம்பரங்களினால் ஏற்படும் விளைவுகள்.
  1. அறியாத பொருட்களை அறிமுகம் செய்தல்.
  2. பொருளை வாங்குவதற்குவதற்கான நாட்டத்தை அதிகரித்தல்.
  3. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளல்.

- விளம்பரங்களில் அமைய வேண்டிய அம்சங்கள்.
  1. பத்திரிகை விளம்பரங்களில் அமைய வேண்டியன.
     (அ) கவர்ச்சியான மொழிநடை
     (ஆ) சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்
     (இ) பல்வேறு வர்ணங்கள்
     (ஈ) கவர்ச்சியான படங்கள், குறியீடுகள்
     (உ) நம்பவைக்கும் பாங்கு
     (ஊ) தனிப்பட்ட கவனத்தை ஈர்த்தல்
  2. வானொலி விளம்பரங்கள்.
     சிறந்த ஒலியமைப்பு
     கேட்போரைப் பிணிக்கும் தன்மை(தொனி, வேகம், குரல் வசீகரம்)
  3. தொலைக்காட்சி விளம்ரபங்கள்.
     - சிறந்த ஒலி, ஒளி அமைப்பு

     (காட்சிக்கும் செவிக்கும் விருந்தாக அமைதல், பொருத்தமான அங்க அசைவு, முகபாவனை)

  - நியாயமான எடுத்துக்காட்டு நிகழ்ச்சிகள்

- விளம்பரம் எழுதப்படும் முறை.
  - (அ) பெரிய எழுத்து
  - (ஆ) கவர்ச்சியான தோற்றம்
  - (இ) இனிமையான மொழிநடை
  - (ஈ) கண்கவர் படங்கள்
  - (ஊ) பொருத்தமான நிறுத்தற் குறியீடுகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி விளம்பரங்கள்
- பத்திரிகைகள்
- கட்புல, செவிப்புலக் கருவிகள்
- டிமைன்தாள்
- எழுது கருவிகள்
- இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு (DVD)
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- படைப்புக்களை அறிந்து இனங்கண்டு துலங்குவார்.
- விளம்பரங்களில் இருக்க வேண்டிய அம்சங்களைப் பட்டிற்படுத்துவார்.
- கொடுக்கப்படும் விடயத்திற்கேற்ப விளம்பரங்களைச் செம்மையாக நிகழ்த்திக் காட்டுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : திரிசொற்கள்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- திரிசொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- திரிசொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து துலங்குவார்.
- திரிசொற்களின் பொருளை அறிந்து பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- திரிசொற்களைச் செம்மையாகப் பிரயோகிக்கும் வழிவகைகளை அறிந்து பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- திரிசொற்களின் பயன்பாட்டை விளக்குதல்.
- திரிசொற்களின் பொருளை இனங்காணச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, திரிசொற்களை இனங்காணவும் அட்டவணைப் படுத்தவும் உதவுதல்.
- திரிசொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க உதவுதல்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ள உதவுதல்.
- மாணவர்களைக் கணிப்பிடலும் மதிப்பிடலும்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- தமிழில் வழங்கும் சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என நான்கு வகையாக வகுக்கலாம்.
- வேறொரு வகையில் பெயர், வினை, இடை, உரி என நான்காகவும் வகைப்படுத்தலாம்.
- கற்றோரும் மற்றோரும் இயல்பாகப் பொருளறிந்து வழங்கும் சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.
- கற்றவருக்கே அன்றி ஏனையோருக்கு இயல்பாகப் பொருள் விளங்காத கடினமான சொற்கள் திரிசொல் எனப்படும்.
- இது ஒரு பொருள் குறித்த பலசொல்லாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் வரும். இவை பொதுவாகச் செய்யுள் வழக்கில் பயில்வனவாகும்.

நாகம் - பாம்பு, மலை, நாகமரம் - ஒரு சொல் பலபொருள்
கானம் - பாட்டு, காடு
களபம், மாதங்கம், வேழம் - யானை - பல சொல் ஒருபொருள்
புரவி, பரி, அசுவம் - குதிரை

**பெயர் திரிசொல்**

மலை - வெற்பு, விலங்கல், வரை, குன்று - ஒரு பொருள் பல சொல்
ஆழி - கடல், சக்கரம் (சக்கராயுதம்) வட்டம், சில்லு - பலசொல் ஒரு பொருள்

**வினைத்திரிசொல்**

போனான் - சென்றான், போயினான், படர்ந்தான், ஏகினான் - ஒருபொருள் பலசொல்
வரைந்தான் - கொண்டான், நிருணயித்தான், எழுதினான் - ஒருசொல் பலபொருள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மேலதிக சொற்கள் அட்டவணை
- டிமைன் தாள்
- கதைப்பகுதிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- திரிசொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து துலங்குவார்.
- திரிசொற்களின் பொருளை அறிந்து பிரயோகிப்பார்.
- திரிசொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- திரிசொற்களைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சிய விருத்தியுடன் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 12.0** : சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : திசைச் சொற்கள்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- திசைச் சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- திசைச்சொற்களின் பொருளை அறிந்து பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- சொற்களைச் செம்மையாகப் பிரயோகிக்கும் வழிவகைகளை அறிந்து பயன்படுத்துவார்.
- சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- திசைச் சொற்களின் பயன்பாட்டை விளக்குதல்.
- திசைச் சொற்களின் பொருளை விளக்குதல்.
- திசைச் சொற்களை இனங்காணவும் அட்டவணைப்படுத்தவும் உதவுதல்.
- திசைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க உதவுதல்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ள உதவுதல்.
- கணிப்பீட்டினையும், மதிப்பீட்டினையும் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களே திசைச் சொற்கள் எனப்படும். வடதிசை உட்பட வேறு திசைகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து வழங்குவன திசைச் சொற்களாகும். ஆயினும் ஏனைய திசைச் சொற்கள் போலன்றி ஆரியமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளமையால் அவை திசைச் சொற்களில் அடக்கப்படாமல் வடசொற்கள் என வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| போர்த்துக்கேய மொழி | : | கடதாசி, அலுமாரி, அலவாங்கு, அன்னாசி, வாங்கு, கதிரை, சாவி, பீங்கான், கோப்பை, ஏலம், ஜன்னல், வரந்தா |
| ஒல்லாந்தர் மொழி | : | உலாந்தா, கக்கூசு, சாக்கு, துட்டு |
| பிரஞ்சு மொழி | : | பட்டாளம், துருப்பு, குசுனி |
| மலையாள மொழி | : | தளவாடம், கொச்சி |
| தெலுங்கு மொழி | : | கொலுசு, சந்தடி, கலவை, விருது |
| ஆங்கில மொழி | : | பென்சில், இறப்பர், இஞ்சினியர், அப்பீல், மோட்டார் கார், மைல் |
| இந்தி மொழி | : | அச்சா, தயார், வாபசு, சமாச்சாரம் |
| சிங்கள மொழி | : | தோடை, வத்தாளை, முருங்கை |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மேலதிக சொற்களின் அட்டவணை
- டிமைன் தாள்
- கதைப் பகுதிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- திசைச் சொற்கள் எவ்வெவ் மொழிகளிலிருந்து வந்து வழங்குகின்றன என்பதை அறிந்து கூறுவார்.
- திசைச் சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- திசைச் சொற்களைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- சொற் களஞ்சிய விருத்தியுடன் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 12.0** : சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தொடர்மொழிக்கு ஒரு மொழி.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- தொடர்மொழிக்கு ஒரு மொழி என்றால் என்ன என்பதை அறிந்து பிரயோகிப்பார்.
- நீண்ட தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொல்லால் உணர்த்த முடியும் என்பதை அறிந்து பிரயோகிப்பார்.
- தொடர்மொழிக்கு ஒரு மொழி என்றால் என்ன என்பது பற்றி கலந்துரையாடுவார்.
- சொற் சுருக்கத்தில் தொடர்மொழிக்கு ஒருமொழியின் பயன்பாடு பற்றி அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- தொடர்மொழிக்கு ஒருமொழி என்றால் என்ன என்பத பற்றிக் கலந்துரையாடுதல்.
- நீண்ட தொடரை ஒரு சொல்லால் உணர்த்த முடியும் என்பதை விளக்குதல்.
- உதாரணங்கள் மூலம் எடுத்துக் கூறிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி தொடர்மொழிக்கு ஒருமொழிகளைப் பட்டியற்படுத்த உதவுதல்.
- தொடர்மொழிக்கு ஒருமொழியைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

அரங்கேற்றம் : அறிஞர் பலர் கூடிய, சபை நடுவே புதிதாய் ஆக்கப்பட்டதொன்றை மேடையேற்றுதல்.

அந்தப்புரம் : அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்கு அமைந்த தனியிடம்

ஆவணம் : உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம் (உறுதி) என்றும் அழைக்கப்படும்.

இடக்கரடக்கல் : அவையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறொரு சொல்லால் கூறுவது.

ஐம்புலன் : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

– பாடநூல்
– எழுதுதாள்
- எழுதுகருவிகள்
– செயற்பாட்டுப் படிவங்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தொடர்மொழிக்கு ஒரு மொழி என்றால் என்ன என்பதை எழுதிக்காட்டுவார்.
- நீண்ட தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொல்லால் உணர்த்தக் கூடிய சொற்களைத் தேடித் தொகுப்பார்.
- தொடர்மொழிக்கு ஒரு மொழியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் கூறுவார்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : துண்டுப்பிரசுரம்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- துண்டுப்பிரசுரம் பற்றி விளக்கமாகக் கூறுவார்.
- துண்டுபிரசுரத்தில் இடம்பெற வேண்டிய அம்சங்களைக் கூறுவார்.
- துண்டுப்பிரசுரங்களின் அமைப்பினை எழுதுவார்.
- துண்டுப்பிரசுரம் எழுதப்படும் சந்தர்ப்பங்களை விபரிப்பார்.
- துண்டுப்பிரசுரம் எழுதப்படும் நோக்கங்களைக் கூறுவார்.
- துண்டுபிரசுரங்களை எழுதும் திறனைப்பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாதிரித் துண்டுப்பிரசுரங்களை வழங்கி அவற்றை வாசித்து விளங்கிக் கொள்ள வழிப்படுத்தல்.
- மாணவர்களுடன் கலந்துரையாடித் துண்டுப்பிரசுரத்தை அறிமுகஞ் செய்தல்.
- துண்டுப்பிரசுரம் ஏன் எழுதப்படுகின்றது என்பது பற்றி விபரித்தல்.
- துண்டுப்பிரசுரம் ஒன்றில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் பற்றிக் கூறுதல்.
- மாணவரைக் குழுக்களாக்கி தலைப்புகள் வழங்கி கலந்துரையாடச் செய்து மாதிரித் துண்டுப்பிரசுரத்தைத் தயாரிக்கச் செய்தல்.
- தயாரித்த துண்டுப்பிரசுரங்கள் பற்றிய அபிப்பிராயங்களைக் கூறச் செய்தல். ஆலோசனை வழங்குதல்.
- மாணவர்களைத் தனித்தனியாகத் துண்டுப்பிரசுரங்கள் எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- துண்டுப்பிரசுரம் பற்றிய விளக்கம்.
- துண்டுப்பிரசுரம் எழுதப்படுவதற்கான காரணங்கள்.
  - பொதுத் தகவல் சார்ந்தவை
  - விளம்பரஞ் சார்ந்தவை
- துண்டுப்பிரசுரத்தில் அமைய வேண்டிய அம்சங்கள்.
  - கவர்சியான தலைப்பு
  - விளிப்பு
  - செய்தி
  - கவர்ச்சியான மொழிநடை, அமைப்பு
  - சொற்சுருக்கம், தெளிவு
  - வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும்
  - புதுமை மிளிரச் செய்தல்
  - பொதுத் தகவல்களின் முக்கியத்துவம் பற்றி உணர்த்தல்
- துண்டுப்பிரசுரத்தின் அமைப்பு.
  - தலைப்பு
  - விளிப்பு
  - செய்தி
  - முடிப்பு
  - வெளியிடுபவர் பற்றிய விபரம், திகதி
- துண்டுப்பிரசுரங்களால் ஏற்படும் விளைவுகள்
  - தகவல்களை இலகுவாகப் பரப்பலாம்
  - குறுகிய நேரத்தில் பலருக்குத் தகவல்களைப் பரப்பலாம்
  - பொதுத் தகவலுக்காக வழங்கப்படுபவை மக்கள் மனதில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்
  - விழிப்புணர்வை ஏற்படுத்தும்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரித் துண்டுப்பிரசுரங்கள்
- டிமைன் தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- துண்டுப்பிரசுரம் என்றால் என்ன என்பது பற்றிக் கூறுவார்.
- துண்டுப்பிரசுரம் எழுதப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- துண்டுப்பிரசுரத்தின் அமைப்பு, உள்ளடக்கம் என்பனவற்றைத் தயாரிப்பார்.
- துண்டுப்பிரசுரங்களின் பயன்பாட்டை அறிந்து பொருத்தமான சந்தர்ப்பங்களில் துண்டுப்பிரசுரங்களை எழுதுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மரபுத் தொடர்கள்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- மரபுத்தொடர்களுக்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பார்.
- கருத்துக்களைக் கேட்டுக் கிரகித்து அவற்றினை விளக்கும் மரபுத்தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும்போது மரபுத்தொடர்களை பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- மரபுத் தொடர்களின் வகைப்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.
- மரபுத் தொடர்களைப் பொருத்தமுறப் பயன்படுத்தி வாக்கியங்களை அழகுற எழுதுந்திறனைப் பெறுவார்.
- மரபுத் தொடர் விளக்கும் படிப்பினைகளையும் விழுமியக் கருத்துக்களையும் அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஏற்கெனவே அறிந்து கொண்ட மரபுத்தொடர்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, மரபுத்தொடர்களின் கருத்துக்களை எழுதச் செய்தல்.
- மாணவர்களை எழுமாறாக அழைத்து, மரபுத்தொடர்களின் கருத்துக்களைக் கூறச் செய்தல்.
- பொருத்தமான மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கச் செய்தல்.
- மரபுத் தொடர்களைத் தொகுக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- சொற்கள் தமக்குரிய நேர்ப்பொருளை உணர்த்தாமல் தொடரும் ஆற்றலினால் குறிப்புப் பொருள் ஒன்றினை உணர்த்தி வழங்கும் தொடர்மொழி மரபுத்தொடர் எனப்படும்.
- வழிவழியாகக் குறிப்புப் பொருளில் வழங்கிவருதலால் இதனை மரபுத்தொடர் எனல்.

  உதாரணம்:

  | | | |
  |---|---|---|
  | அடிநகர்தல் | - | இடம் விட்டுப் பெயர்தல் |
  | கண்திறத்தல் | - | அறிவு உண்டாதல் |
  | காது கொடுத்தல் | - | கவனித்துக் கேட்டல் |
  | கைவிரித்தல் | - | கொடுப்பதற்கு இல்லையெனல் |
  | தோள் கொடுத்தல் | - | உதவி செய்தல்/ பொறுப்பேற்றல் |
  | வயிறு கடித்தல் | - | பசி மிகுதல் |

- மரபுத்தொடர்கள் பல்வேறு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

  உதாரணம் :

  - தலை பற்றியவை
  - கை பற்றியவை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- டிமைன்தாள்
- செயற்பாட்டுப் படிவங்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- மரபுத் தொடர்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- மரபுத் தொடர்களை வாக்கியங்களில் வைத்து எழுதும் ஆற்றலைப் பெறுவார்.
- மரபுத் தொடர்களின் கருத்துக்களை விளக்கி எழுதுவார்.
- பொருத்தமான மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மரபுப்பெயர் / மரபுச் சொற்கள்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- மரபுச் சொற்களுக்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பார்.
- கருத்துக்களைக் கேட்டுக்கிரகித்து அவற்றினை விளக்கும் மரபுச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும்போது மரபுச் சொற்களை பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- மரபுப் பெயர்களைப் பொருத்தமுறப் பயன்படுத்தி வாக்கியங்களை அழகுற எழுதுவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மரபுச்சொற்களின் பயன்பாட்டை விளக்குதல்.
- மரபுச்சொற்களின் பொருளை இனங்காணச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, மரபுச்சொற்களை இனங்காணவும் அட்டவணைப்படுத்தவும் உதவுதல்.
- மரபுச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க உதவுதல்.
- கணிப்பீட்டினையும், மதிப்பீட்டினையும் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு, ஆன்றோர், தொன்று தொட்டு வழங்கி வந்தனரோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும். அவ்வாறு குறிப்பிடும் சொற்கள் மரபுச் சொற்கள் அல்லது மரபுப் பெயர்கள் எனப்படும்.

  உதாரணம் :

  (1) இளமைப் பெயர்கள் : அணில் - குஞ்சு
  கரடி - குட்டி
  சிங்கம் - குருளை

  (2) குரல் வகையைக் குறிக்கும் : அணில் - கீச்சிடும்
  கரடி - கத்தும்
  சிங்கம் - கர்ச்சிக்கும்

(3) இலைக்குரிய மரபுப்பெயர்கள்

| | | |
|---|---|---|
| நெல், புல் | - | தாள் |
| அரசு, ஆல் | - | இலை |
| தென்னை, பனை | - | ஓலை |

(4) குலைக்குரிய மரபுப்பெயர்.

| | | |
|---|---|---|
| மா, புளி | - | கொத்து |
| வாழை | - | தாறு / குலை |
| நெல், சோளம் | - | கதிர் |

(5) வித்துக்குரிய மரபுப்பெயர்.

| | | |
|---|---|---|
| ஆமணக்கு | - | முத்து |
| நெல் | - | மணி |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மரபுச் சொற்களின் அட்டவணை
- மரபுப் பெயர்கள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- மரபுச் சொற்களை / மரபுப் பெயரைச் சரியாக அறிந்து கூறுவார்.
- மரபுச் சொற்களை / மரபுப் பெயரை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- மரபு சொற்களை / மரபுப் பெயரைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- சொற் களஞ்சிய விருத்தியுடன் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணரந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : பாரதியார் கவிதைகள். (சுயசரிதை 9-13 )

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- பாடல்களைப் பதம் பிரித்தும் கொண்டு கூட்டியும் பொருள் விளங்க வாசிப்பார்.
- பாடல்களில் வரும் அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடலை ஓசையுடன் ஓதிக் காட்டுவார்.
- பாடல்களின் பொருளை சொந்த மொழிநடையில் எழுதி வாசிப்பார்.
- பாடல்களில் வரும் அணிகளை விளக்கும் திறனைப் பெறுவார்.
- பாரதியார் பற்றிய தகவல்களைத் தொகுப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாட அறிமுகத்தைத் திட்டமிடல்.
- பாடலை இசையோடு ஓதிக் காட்டி மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- அரும்பதங்களுக்கு விளக்கம் கூறச் செய்தல்.
- பாடல்களின் பொருளைக் கூறச் செய்தல்.
- மாணவர்களைக் குழுவாகப் பிரித்து பாடலின் பொருளை எழுதச் செய்தல்.
- பாடல்களின் வரம் அணிகளை விளக்குதல்.
- பாடல்களைக் குழுவாகவும் தனித்தனியாகவும் இசையோடு பாடச் செய்தல்.
- கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- பாரதியார் பற்றிய அறிமுகம்
- இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற நவயுகக் கவிஞர்
- அரும்பதங்கள்

1. யாத்த தேருளை
2. புனல்
3. கரணம்
4. சிலங்கு நூல்
5. சாதகம்
6. நாத்திகர்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- டிமைன் தாள்
- பிறிஸ்டல் போர்ட்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடல்களைச் சந்தி பிரித்து கொண்டு கூட்டி பொருள் விளங்க வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடலின் பொருளை எழுதி வாசிப்பார்.
- பாரதியார் பற்றிய தகவல்களைத் தேடித் தொகுப்பார்.

## இரண்டாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 7.0 | 7.1 | அணிகளை அறிதல் (உவமை, உருவகம்) | 3 | 44 |
| 2 | 12.0 | 12.2 | உவமைத் தொடர்கள் | 1 | 46 |
| 3 | 6.0 | 6.2 | அழைப்பிதழ் | 2 | 48 |
| 4 | 1.0 | 1.2 | தனிப்பாடல்கள்<br>பங்கம் பழனத் துழு முழவர்<br>ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் | 4 | 51 |
| 5 | 12.0 | 12.2 | தற்குறிப்பேற்ற அணி, சிலேடை அணி | 3 | 53 |
| 6 | 12.0 | 12.2 | உயர்வு நவிற்சி, இழிவு நவிற்சி அணிகள் | 2 | 56 |
| 7 | 9.0 | 9.1 | சுருக்கம் எழுதுதல் | 4 | 58 |
| 8 | 13.0 | 13.2 | சொற்களின் வகை | 2 | 60 |
| 9 | 13.0 | 13.2 | பெயர்ச்சொல் | 2 | 62 |
| 10 | 13.0 | 13.2 | வினைச்சொல் | 2 | 64 |
| 11 | 3.0 | 3.1 | குற்றாலக் குறவஞ்சி | 6 | 66 |
| 12 | 13.0 | 13.2 | பகுபதம், பகாப்பதம் | 4 | 68 |
| 13 | 11.0 | 11.2 | அறிக்கை எழுதுதல் | 3 | 70 |
| 14 | 13.0 | 13.2 | இடைச்சொல் | 3 | 73 |
| 15 | 10.0 | 10.1 | சொற்றொடர் வகை | 2 | 75 |
| 16 | 7.0 | 7.1 | கம்ப்யூட்டர் - சிறுகதை | 3 | 77 |
| 17 | 1.0 | 1.4 | நாட்டார் பாடல்கள் | 4 | 79 |
| 18 | 8.0 | 8.1 | வாக்கியங்கள் அமைத்தல | 2 | 81 |
| 19 | 13.0 | 13.3 | தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம் | 2 | 83 |
| 20 | 8.0 | 8.2 | வாக்கியங்கள் எழுதுதல் | 2 | 85 |
| 21 | 10.0 | 10.1 | வாக்கிய இயைபு<br>திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட வாக்கியம் அமைத்தல | 2 | 87 |

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசிப்பதனூடாக ஆக்கத்திறனை மேம்படுத்திக் கொள்வார்.

**விடய உள்ளடக்கம்** : அணிகளை அறிதல். (உவமை, உருவகம்)

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- அணி பற்றி அறிந்து கூறுவார்.
- இலக்கியங்களில் அணிப்பிரயோகமானது இரசனையை மேம்படுத்தி இருக்கும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுவார். (குறிப்பாக உவமை, உருவ அணிகளின் இலக்கியப் பிரயோகம்)
- உவமை அணியின் கூறுகளான உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உருபு என்பவற்றை இனங்கண்டு கூறுவார்/ விளக்குவார்.
- உருவக அணியினை இனங்கண்டு விளக்குவார்.
- உவமை அணி, உருவக அணி ஆகியவற்றை வரைவிலக்கணப் படுத்தி, வேறுபாட்டினை விளக்குவார்.
- தமது ஆக்கங்களில் உவமை, உருவக அணிகளைப் பொருத்தமாகப் பிரயோகித்து எழுதுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான முன்னுதாரணங்களைக் கூறிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- உவமை, உருவக அணிகள் பயின்றுவரும் இலக்கியப் பகுதிகளை மாணவரிடம் கொடுத்து வாசித்துக் கருத்துக் கூறச் செய்தல்.
- உவமை அணியின் கூறுகளான உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, என்பனவற்றை இனங்கண்டு, மாணவர்களைக் கலந்துரையாடச் செய்தல்.
- பொருத்தமான இடங்களில் அணிகளைப் பிரயோகித்து எழுதச் செய்தல்.
- அணிகளை இனங்காணச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- அணி என்றால் அழகு என்று பொருள்படும்.
- புலவர்கள் சொல்ல வந்த கருத்தைச் சுவையோடும் அழகோடும் வலிமையோடும் சொல்ல அணிகள் பயன்படுகின்றன.
- அணிகளை சொல்லணி, பொருளணி என இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம்.
  சொல்லணி - மடக்கு, அந்தாதி, பின்வருநிலை போன்றன.
  பொருளணி - உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம்.
- இருவேறு பொருள்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் ஒப்புமை கூறுவது உவமை அணி ஆகும். அறிந்த பொருளைக் கொண்டு அறியாததை விளக்குவதற்கு உவமையணி பயன்படுத்தப்படும். சிலவேளைகளின் அறிந்த இரு பொருள்களுக்கிடையிலான ஒப்புமைகளை விளக்கி இலக்கியப் பொருளை வலிமையுடன் கூறுவதற்கும் பயன்படும்.
- உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உருபு என்பன ஓர் உவமைத் தொடரிலிருந்து தெளிவாக விளங்கி அறியப்பட வேண்டும்.
- உவமை அணி.
  உதாரணம்:
  - பாகுபோன்ற இன்சொல்
  - ஆற்றொழுக்குப் போன்ற மொழிநடை
  - பூப்போல பொலிந்திருக்கும் விண்மீன் கூட்டம்
- உருவக அணி.
  உவமைக்குறிப்பைக் கொண்டு ஒரு பொருளை மற்றொருபொருளாக உருவகப்படுத்தும் அணி உருவக அணியாகும்.
  உதாரணம்:
  உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது, மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே, நெடுவானக்குளத்திடை வெண்ணிலாவே.
  உள்ளம் கமல மலராகவும், விழிகள் தாமரையாகவும், வானம் குளமாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- இலக்கிய நூல்கள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- அணி என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- குறிப்பிட்ட இலக்கியப் பகுதிகளை வாசித்து அதில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- உவமை அணியை இனங்கண்டு உவமையின் கூறுகளான உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உருபு என்பவற்றை வேறுபடுத்திக் கூறுவார்.
- உருவக அணிக்கு விளக்கம் தருவார்.
- இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள உருவக அணிகளை இனம் கண்டு விளக்குவார்.
- சிறந்த உவமை, உருவக அணிப்பிரயோகங்களுடன் சிறிய ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் வகைகளையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிபபார்.

**விடய உள்ளடக்கம்** : உவமைத் தொடர்கள்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- உவமைத் தொடரின் முக்கியத்துவத்தை அறிந்து துலங்குவார்.
- உவமைத் தொடரின் பொருளை அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.
- உவமைத் தொடரின் பொருளை அறிந்து பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உவமைத் தொடரின் பயன்பாட்டை விளக்குதல்.
- உவமைத் தொடர்ச் சொற்களை தொகுப்பதற்கு உதவி செய்தல்.
- உவமைத் தொடரினை ஆக்கங்களில் பிரயோகிக்க வழிகாட்டுதல்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ள உதவுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- நன்கு தெரிந்த ஒரு பொருளின் தன்மையை நினைவுறுத்தி தெரியாத பொருளின் தன்மையை அறிவுறுத்தும் தொடர் உவமை எனப் பெயர் பெறும்.
- கருத்தைத் தெளிவாகவும் நிறைவாகவும் சுருக்கமாகவும் சுவையாகவும் வெளிப்படுத்துவதற்கு உவமைத் தொடர் பயன்படும்.
- உவமைத் தொடரில் உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத் தன்மை ஆகிய நான்கு உறுப்புக்கள் உள்ளன.

உதாரணம்: உவமைத் தொடர்கள்.

- அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல.
- அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல.
- ஆற்றங்கரையில் மரம் போல.
- இரு தலைக் கொள்ளி எறும்பு போல.
- உள்ளங்கை நெல்லிக் கனி போல.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- உவமைத் தொடர் அடங்கிய அட்டவணை
- எழுதுதாள்
- டிமைன்தாள்
- கலர்பெட்டி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- உவமைத் தொடரின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- உவமைத் தொடரினைத் தேடித் தொகுப்பார்.
- உவமைத் தொடரின் பொருளறிந்து ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- உவமைத் தொடரின் சிறப்புக்களையும் பொருத்தப்பாட்டினையும் கூறுவார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : அழைப்பிதழ்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- படைப்பாக்கங்களை இனங்கண்டு துலங்குவார்.
- அழைப்பிதழ்கள் பல்வேறு வகைப்படும் என்பதனைக் கூறுவார்.
- அழைப்பிதழ்களின் தேவையையும் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தயைும் விளக்குவார்.
- அழைப்பிதழில் அமைய வேண்டிய உறுப்புக்களைப் பட்டியற்படுத்துவார் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வைபவங்களுக்கு பெரியோர், உறவினர், நண்பர்கள் முதலானோரை அழைக்கும் முறை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- அழைப்பிதழ் அமைப்பைக் காட்டி விளக்குதல்.
- அழைப்பிதழ், நிகழ்வுகளுக்கேற்ப மாறுபடும் என்பதனைக் கூறுதல்.
- தலைப்பு, விளிப்பு, இடம், காலம், நேரம், அழைப்பவரின் பெயர் என்பன அழைப்பிதழின் உறுப்புக்களாகும் என விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கிப் பல்வேறு அழைப்பிதழ் வடிவங்களைப் பற்றிக் கூறச் செய்தல்.
- மாணவர் படைப்புக்களை முன்வைத்தல், ஏனைய மாணவர் குழுக்கள் ஆலோசனைகளைக் கூறச் செய்தல்.
- தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- அழைப்பிதழ் வகைகள்.
- அழைப்பிதழ் உறுப்புகள்.

(1) பாடசாலை நிகழ்ச்சிகளுக்கானவை.

- விளையாட்டு விழா
- பரிசளிப்பு விழா
- வாணி விழா/ ஒளி விழா/ மீலாத் விழா போன்ற சமய விழாக்கள்
- விசேட நிகழ்வுகளுக்கானவை

உ-ம்: முத்தமிழ் விழா
தமிழ் மன்றம்

(2) குடும்ப வைபவங்களுக்கானவை.

- புதுமனைப் புகுவிழா
- திருமண விழா
- பூப்பு நீராட்டு விழா

(3) பொது நிறுவனங்கின் வைபவங்களுக்கானவை.

- தொடக்க விழா
- ஆண்டுப் பூர்த்தி விழா
- வெள்ளி விழா / பொன்விழா முதலானவை.

(4) தனிநபர் தொடர்பான விழாக்கள்.

- மணி விழா
- பாராட்டு விழா
- நினைவு விழா/ ஞாபகார்த்த வெளியீட்டு விழா

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி அழைப்பிதழ்கள்
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- அழைப்பிதழ் வடிவங்களை இனங்கண்டு துலங்குவார்.
- அழைப்பிதழ்களை உரிய வடிவமைப்பில் எழுதி விபரிப்பார்.
- அழைப்பிதழின் தேவைபற்றி விளக்குவார்.
- அழைப்பிதழில் அமைய வேண்டிய உறுப்புக்களைப் பட்டியலிட்டுக் காட்டுவார்.
- சந்தர்ப்பங்களுக்கேற்ப பொருத்தமான அழைப்பிதழ்களை எழுதுவார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத் திறனுடன் கேட்டுக்கிரகித்து துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார்.

**விடய உள்ளடக்கம்** : தனிப்பாடல்கள்.

- பங்கம் பழனத் துழு முழவர் .......
- ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் .......

**பாடவேளை** **:** 04

**கற்றற் பேறுகள்**

- பாடல்களைப் பதம் பிரித்துச் சொல்லுவார்.
- பாடல்களைக் கொண்டு கூட்டிப் பொருள் விளங்க ஓதுவார்.
- அருஞ்சொற்களின் பொருளை எழுதுவார்.
- பாடல்களின் பொருளைத் தமது மொழி நடையில் எழுதுவார்.
- நயந்த பகுதிகளை முன்வைப்பார்.
- பாடலில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு துலங்குவார்.
- பாடல்களை மனனம் செய்து ஓதும் திறனைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- தனிப்பாடல்கள் பற்றிய விளக்கம்.
- பாடல் ஆசிரியர்கள் பற்றி அறிமுகம் செய்து கலந்துரையாடல்.
- பாடல்களைப் பதம் பிரித்து, கொண்டு கூட்டி வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வினாக்களை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்தல்.
- குழுச் செயற்பாடுகளில் விடைகளை முன்வைக்க உதவி செய்தல்.
- பாடல்களின் பொருள் தொடர்பாக அபிப்பிராயங்களைக் கேட்டல்.
- அணிகள் பற்றிய விளக்கம்.
- பாடல்களின் நயந்த பகுதிகளைக் கேட்டு விளக்கமளித்தல்.
- கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- பாடல்களை இயற்றியவர்கள்
- சந்தர்ப்பங்களுக்கேற்ப பாடிய பாடல்கள் - தனிப்பாடல்கள்
- பங்கப் பழனத்துழு முழவர்
- உழுகின்ற உழவர்கள் தாகசாந்தி செய்வதற்கு கையாண்ட உத்தி (சங்குகளினால் குரங்குகளுக்கு எறிதல், குரங்குகள் பருவமான நல்ல செவ்விள நீர்களைப் பறித்து உழவர் மேல் எறிதல்)
- நாட்டின் வளம்
- சோழ மகாராசாவின் வீரம்

- பெண்ணினுடைய வேல் போன்ற கண்கள்
- 'ஆசு' கவி என்று பாடியது
- ஆசு கவி என்றால் இங்கு விரைந்து பாடுகின்ற புலவன் என்பது பொருள்.
  ஓர் தட்டிலே பொன்னு
- படிக்காசுப் புலவர்
- தொண்டை மண்டல சதகத்தைப் பாடியவர்.
- சீதக்காதி என்னும் வள்ளலின் காலத்தில் வாழ்ந்த அவருடைய அன்புக்குரியவராக விளங்கியவர்
- கொடிய பஞ்ச காலங்களிலும் அந்த வள்ளல் ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்து காப்பாற்றிய பேருதவி

"கழியும் பிழை பொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்த இடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாளமேகம் புறப்பட்டதே".

- புலவர் பற்றிய விபரம்
- கடல் போன்ற நூல்களைக் கற்று
  அறிவுக்கு உணவாக உண்டு
- பொதிகை மலைத் தென்றலை துணையாகக் கொண்டு கவிதையைப் பாடி.
- புலவர்களுடைய மனமாகிய வானத்தில் ஏறி - காதுகள் செவிடாகும்படி முழங்கி, மின்னிப் பொழியும் மழையொத்த கவிபொழிய இந்தக் காளமேகம் புறப்பட்டு விட்டது
- அணிச்சிறப்புகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுதுதாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடல்களைப் பதப்பிரிப்புச் செய்து எழுதிக் காட்டுவார்.
- பாடல்களில் உள்ள சொல்லணியை, உவமையணியை இனங்கண்டு எழுதுவார்.
- பாடல்களில் நயந்த பகுதியை எழுதிக் காட்டுவார்.
- பாடல்களின் பொருளைச் சொந்த மொழி நடையில் கூறுவார்.
- வேறுபாடல்களை நயந்து எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- பாடல்களை மனனஞ் செய்து இசையுடன் ஓதிக்காட்டுவார்.

**தேர்ச்சி 12.0 :** சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2 :** சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** அணிகளை அறிதல்
தற்குறிப்பேற்ற அணி.
சிலேடை அணி.

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள்**

- அணிகள் பற்றி அறிந்து கூறுவார்.
- இலக்கியங்களிலுள்ள அணிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார்.
- அணிகளை விளக்கிக்கூறுவார்.
- தற்குறிப்பேற்ற அணி, சிலேடை அணி என்பவற்றை விளங்கி எழுதுவார்.
- இலக்கியத்திலுள்ள அணிகளை நயப்பதுடன் தாமும் அணிகளைப் பிரயோகிக்கும் ஆற்றல் பெறுவார்.
- தற்குறிப்பேற்ற அணி, சிலேடை அணி என்பவற்றைப் பயன்படுத்தித் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாடத்தில் வரும் தற்குறிப்பேற்ற அணி, சிலேடை அணிகளைக் காட்சிப்படுத்தல்.
  உதாரணம்:

(1) சீதையின் சுயம்வர நிகழ்விற்கு இராமன் தன் தம்பியுடனும் விசுவாமித்திர முனிவருடனும் செல்லும்போது மிதிலை நகரின் வாயிற்கொடி, வாருங்கள் வாருங்கள் என அழைப்பது போல் அசைந்தன.

(கொடிகள் காற்றுக்கு அசைவது இயற்கை நிகழ்வு. இந்த இயற்கை நிகழ்வில் புலவன் தன் கருத்தை ஏற்றிக் கூறயிருக்கின்றான். இது தற்குறிப்பேற்ற அணி ஆகும்)

(2) உள்ள மிளகாயா ஒரு பேச் சுரைக்காயா

(உள்ள மிளகாயா ஒரு பே(ய்)ச் சுரைக்காயா

உள்ளம் இளகாயா ஒரு பேச்சு உரைக்காயா)

- குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களின் சிறப்புக்கு காரணமாகிய அணிகளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- அணிகள் பற்றிய விளக்கத்தை மாணவர்களுக்கு அளித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- அணிகள் பற்றிய பாடப்பகுதிகளை மாணவர்களுக்கு வழங்குதல்.
- அவற்றிலுள்ள அணிகளை முன்வைக்கவும், கலந்துரையாடவும் வழிகாட்டுதல்.
- மாணவர்களுக்குத் தேவையான விளக்கம் அளித்தல்.
- சில பாடப்பகுதிகளை செய்யுட் பகுதிகளை வழங்கி மாணவர்கள் தமது விளக்கங்களை முன்வைக்க இடமளித்தல்.
- கணிப்பீட்டினைளும் மதிப்பீட்டினையும் மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- அணி என்பது அழகுபடுத்துவது. இது ஒரு விடயத்தை கவர்ச்சியுடன் கூறும் உத்தியாக அமைகின்றது. எடுத்த பொருளைச் சிறப்புடன், அழகுபடக் கூறுவதற்கு அணிகள் உதவுகின்றன.

**தற்குறிப்பேற்ற அணி**

- ஒரு புலவன் / கவிஞன் இயற்கை நிகழ்ச்சி ஒன்றின் மீது தனது கருத்தை ஏற்றிக் கூறுவதாகும்.

  உதாரணம்:

  தசரதன் கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டு மயங்கிச் சாய்ந்த போது.

  - கோழிகள் சிறகடித்துக் கூவியமை இயற்கை நிகழ்ச்சி.
  - தசரதன் இறந்த துன்பம் தாங்காது கோழிக்குலம் மார்பில் அடித்துப் புலம்புவதாகக் கூறியமை.

**சிலேடை அணி**

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருமாறு அமைத்துக் கூறுவது சிலேடை அணியாகும்.

  உதாரணம்:

  1. தலைவி திவசம் நடந்து முடிந்தது ⎤ இருவேறு.
  2. தலைவிதி வசம் நடந்து முடிந்தது ⎦ பொருள்கள்.

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- அணிகளை வகைப்படுத்துவார்.
- அணிகளை விளக்கிக் கூறுவார்.
- அணிகளைப் பொருத்தமாக ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : உயர்வு நவிற்சி, இழிவு நவிற்சி அணிகள்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- அணிகளுக்கான வரைவிலக்கணத்தினை மீட்டுக் கூறுவார்.
- இலக்கியத்திலுள்ள அணிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார்.
- அவ் அணிகளை விளக்கிக் கூறுவார்.
- உயர்வு நவிற்சி அணி, இழிவு நவிற்சி அணி என்பவற்றை விளக்கி எழுதுவார்.
- இலக்கியத்திலுள்ள அணிகளை நயப்பதுடன் தாமும் அணிகளைப் பிரயோகிப்பார்.
- உயர்வு நவிற்சி, இழிவு நவிற்சி அணி என்பவற்றைப் பயன்படுத்தித் தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாடத்தில் வரும் உயர்வு நவிற்சி, இழிவு நவிற்சி அணிகளைக் காட்சிப்படுத்தல் அல்லது வேறு உதாரணங்களைக் காட்சிப்படுத்தல்.

  உதாரணம்:

  1. கோட்டைச் சுவர்கள் வானத்தைத் தொடுமளவிற்கு உயர்ந்து நின்றன.
  2. நாயினுங் கடையேனாகிய எனக்கு அருள்தாரும் இறைவா!

- குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களின் சிறப்புக்குக் காரணமாகிய அணிகளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
  - அணிகள் பற்றிய விளக்கத்தை மாணவர்களுக்கு அளித்தல்.
  - மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
  - அணிகள் பற்றிய பாடப்பகுதிகளை மாணவர்களுக்கு வழங்குதல்.
  - அவற்றிலுள்ள அணிகளை முன்வைக்கவும், கலந்துரையாடவும் வழிகாட்டுதல்.
  - மாணவர்களுக்குத் தேவையான விளக்கம் அளித்தல்.

- சில பாடப்பகுதிகளை, செய்யுட் பகுதிகளை வழங்கி மாணவர்கள் தமது விளக்கங்களை முன்வைக்க இடமளித்தல்.
- கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- அணி என்பது அலங்காரம் எனப் பொருள்படும்.
  ஒன்றை அழகு செய்வது அணியாகும்.

**உயர்வு நவிற்சி அணி**

- உள்ளதை மிகைப்படுத்தி கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

உதாரணம்:

கோட்டைச் சுவர்கள் வானத்தைத் தொடுமளவிற்கு உயர்ந்து நின்றன.
கோட்டைச் சுவர்களின் உயரம் மிகுவித்துக் கூறப்பட்டுள்ளது.

**இழிவு நவிற்சி அணி**

- ஒன்றை மிக இழிவாகக் கூறுவது இழிவு நவிற்சி அணியாகும்.
  உதாரணம்:
  நாயினுங் கடையேன் நான்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- செய்யுட்பகுதிகள்
- உரைநடைப்பகுதிகள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- அணிகள் என்றால் என்ன என்பதை அறிந்து துலங்குவார்.
- இலக்கியங்களிலுள்ள அணிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார்.
- அணிகளை விளக்கி எழுதுவார்.
- உயர்வு நவிற்சி, இழிவு நவிற்சி அணி என்பவற்றை விளக்கிக் கூறுவார்.
- இலக்கியங்களிலுள்ள அணிகளை நயப்பதுடன் தாமும் அணிகளை பிரயோகிப்பார்.
- அணிகளைப் பயன்படுத்தி ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1:** வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்:** சுருக்கம் எழுதுதல்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- உரைநடைப்பகுதியை வாசித்துக் கிரகித்து பிரதான கருத்துக்களைத் தெரிந்து எடுப்பார்.
- வாசித்துக் கிரகித்த பகுதியில் தலைமைக்கருத்து துணைக் கருத்துக்களை இனங்கண்டு குறித்துக் கொள்வார்.
- கிரகித்தவற்றில் தேவையானவற்றை குறித்துக் கொள்ளவும், தேவையற்றவற்றை நீக்கவும் பழகிகி கொள்வார்.
- ஒழுங்கு படுத்தப்பட்ட கருத்துக்களைப் பந்தியாக, பொருத்தமான குறியீடுகள் இட்டுச் சொந்த மொழி நடையில் சுருக்கமாக எழுதுவார்.
- மூலப் பந்தியையும் சுருக்கப் பந்தியையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்.
- வாசித்துக் கிரகித்த விடயம் ஒன்றினைத் தெளிவாகவும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் எழுதும் ஆற்றலைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சில வாக்கியங்களை வழங்கி அவற்றின் பொருளை ஒரு வார்த்தையில் அல்லது சுருக்கமாகக் கூறுமாறு மாணவர்களைப் பணித்தல்.
- பெரிய பந்திகள் வழங்கி அற்றின் தலைமைக் கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறவும் மாணவருக்கு வழிகாட்டுதல்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி, பொருத்தமானவற்றைச்ளு சொந்த மொழி நடையில் கூறச் செய்தல்.

- மாணவர்களைக் குழுக்களாக்கி, உரைநடைப் பகுதிகள் பலவற்றை வழங்கி, அவற்றின் சாராம்சத்தைக் குறிப்பிட்ட சொற்களில் சொந்தமொழி நடையில், குறியீடுகளை இட்டு எழுதுமாறு பணித்தல்.
- மாணவர்கள் தமது செயற்பாடுகளை முன்வைத்தல், குறைநிறைகளைக் கலந்துரையாடுதல்.
- தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.
- கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- ஒரு வாக்கியத்தை ஒரு சொல்லில் கூறக்கூடிய தொகைமொழிகளை அறிந்திருத்தல் நன்று.

  உதாரணம் : ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிப்பவன் - தசாவதானி
- சுருக்கத்தில் தேவையற்றவற்றை நீக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

  உதாரணம் :
    - உவமைகள், உவமைத் தொடர்கள்
    - வருணனைகள்
    - (வெள்ளை நடைகள்)
    - மேற்கோள்கள்
    - பழமொழிகள், பொன்மொழிகள்
- சொந்த மொழி நடையில் சுருக்கமாகக் கூற, எழுத அறிந்திருத்தல் வேண்டும்.

  உதாரணம் :

  போர்க்களத்தில் நீண்ட நேரமாகப் போரிட்ட மன்னன் இறுதியில் எதிரிப்படைகளால் கொல்லப்பட்டான்.

  சுருக்கம் : மன்னன் யுத்தத்தில் கொல்லப்பட்டான்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடப் பரப்புகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாசித்துக் கிரகித்து, உரைநடைகளின் மையக்கருத்துக்களை இனங்கண்டு துலங்குவார்.
- சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய விடயங்களை இனங்கண்டு கூறுவார்.
- கிரகித்தவற்றில் தேவையானவற்றைக் குறிப்பெடுக்கவும் தேவையற்றவற்றை நீக்கவும் தெரிந்து பயன்படுத்துவார்.
- பொருத்தமான முறையில், குறியீடுகளை இட்டுச் சுருக்கத்தை எழுதுவார்.
- சுருக்கத்தின் பயன்பாட்டையும் சந்தர்ப்பத்தையும் அறிந்து அதற்கேற்பப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்களின் வகை.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- சொற்களின் பொருளை அறிந்து துலங்குவார்.
- சொற்களைப் பல்வேறு விதங்களில் வகைப்படுத்துவதற்கு அறிந்து கொள்வார்.
- சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.
- சொற்களின் வகையை அறிந்து, அவற்றைப் பொருத்தமான விதத்தில் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- சொற்றொகுதிகளை வழங்கி, மாணவர்கள் குழுக்களாக வகைப்படுத்தலை மேற்கொள்ள வழிப்படுத்தல்.
- தேவையான விளக்கங்களை வழங்கி வழிப்படுத்தல் .
- மாணவர்களின் பயிற்சிகளைப் பார்வையிட்டு, பெர்ருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

**சொற்கள்**

பொருள்கள், கருத்துக்கள், செயற்பாடுகள் முதலானவற்றைக் குறித்து நிற்பன.

**சொற்களின் வகைகள்**

சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்கள்
- பயிற்சிகள்
- அகராதி
- ஒலிப் பதிவுகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- சொற்களின் பொருளை அறிந்து துலங்குவார்.
- சொற்களைப் பல்வேறு விதங்களில் வகைப்படுத்துவார்.
- சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.
- சொல் வகைமையை அறிந்து தமது ஆக்கங்களில் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பெயர்ச்சொல்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- சொற்களின் வகையை அறிந்து கூறுவார்.
- பெயரச் சொற்களின் தனித்துவமான பண்பினைக் கூறுவார்.
- மாற்றுப் பெயர் பற்றி அறிந்து கூறுவார்.
- ஆக்கப் பெயர் பற்றி அறிந்து கூறுவார்.
- கூட்டுப் பெயர் பற்றி அறிந்து கூறுவார்.
- தொழிற் பெயர் பற்றி அறிந்து கூறுவார்.
- வினையாலணையும் பெயர் பற்றி அறிந்து கூறுவார்.
- பெயர்ச் சொற்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தும் ஆற்றல் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பல வகைச் சொற்களைப் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்தல்.
- பெயர்ச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- இனங்காணப்பட்ட சொற்களின் தன்மை பற்றி வினவுதல்.
- இது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- கணிப்பீட்டினைப் பொருத்தமுறச் செய்வதற்காக மாணவர்களை குழுக்களாகப் பிரித்து வினாக்களைக் கொடுத்தல்.
  - தனித்தனியாகவும் குழுவாகவும் விடைகளை முன்வைக்கச் செய்தல்.
  - மீண்டும் கலந்துரையாடி ஐயத்தைத் தெளிவுபெறச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- மாற்றுப் பெயர்கள் - நான், நீ, அவன், யார், யாரோ

  ஆக்கப் பெயர்கள் - முதல் + ஆளி, பொருள் + இயல், புத்தி + சாலி

  கூட்டுப் பெயர்கள் - வான் + ஒலி, நீர் + வீழ்ச்சி, உல்லாசம் + பயணம்

  தொழிற் பெயர்கள் - படி+ த்தல், காண்+ தல், போ+ ன்+ அது, செய் + ஆத் + அது

  வினையாலணையும் பெயர் - வளர் + ந்த் + அவன்

  செய் + ஆத் + அவன்

  செய் + அத் + அவை

- பெயர்ச் சொற்கள் ஆக்கப்படும் முறையினை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- டிமைன்தாள்
- சொல்லட்டை
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- மின்திறப் புள்ளி (Power Point)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- சொற்களின் வகைகளை இனங்காண்பார்.
- பெயர்ச் சொற்களை வேறுபடுத்திப் பட்டியலிட்டுக் காட்டுவார்.
- பெயர்ச் சொற்கள் ஆக்கப்படும் முறையினை எழுதிக்காட்டுவார்.
- மாற்றுப் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.
- ஆக்கப்பெயர், கூட்டுப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவை ஆக்கப்படும் முறைபற்றி அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வினைச்சொல்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- வினைச் சொற்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- தனி வினை பற்றி அறிந்து கூறுவார்.
- கூட்டு வினை பற்றி அறிந்து கூறுவார்.
- வினைமுற்றுப் பற்றி அறிந்து கூறுவார்.
- பெயரெச்சம், வினைசெயச்சம் பற்றி அறிந்து கூறுவார்.
- தன்வினை, பிறவினை பற்றி அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாட அறிமுகத்தினைப் பொருத்தமான முறையில் வெளிக்கொண்டு வருவார்.
- வினை என்ற சொல்லுக்கான விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.
- வினைச் சொற்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்களின் முன்னைய விளக்கத்தை அறிதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து சொற்கள் அடங்கிய அட்டையினைக் கொடுத்து வினைச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- தனியாகவும் குழுவாகவும் விடைகளை முன்வைக்கச் செய்தல்.
- தன்வினை, பிறவினை பற்றி விளக்கமளித்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- தனி வினை - ஓடு, நில், பாருங்கள், பாடுகின்றார்கள்.

  கூட்டு வினை - தந்தியடி, காத்திரு, முன்னேறு.

  வினை முற்று - (தம்பி) பாடினான்.

  - நிகழ்கால இடைநிலை - ஆனின்று, கின்று, கிறு
  - எதிர்கால இடைநிலை - ப், வ்
  - இறந்த கால இடைநிலை - த், ட், ற், இன்

  பெயரெச்சம் - செய்த, செய்கின்ற, செய்யும்

  வினையெச்சம் - ஓடி (விழுந்தான்)

  தன்வினை - தம்பி நிலத்தில் உருண்டான்

  பிறவினை - தம்பி பானையை நிலத்தில் உருட்டினான்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- டிமைன்தாள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- மின் திறப் புள்ளி (Power Point)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- முன்வைக்கப்படும் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- வினைச் சொற்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- முற்றுவினைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.
- தெரிநிலை வினைமுற்று காலம் காட்டும் என்பதனைக் கூறுவார்.
- எதிர்மறை வினை முற்று, ஏவல் வினை முற்று, வியங்கோள் வினைமுற்றுக்களை எடுத்துக் காட்டுவார்.
- தன்வினை, பிற வினைகளை எடுத்துக்காட்டுவார்.
- செய்வினை, செயப்பாட்டு வினைகளை எடுத்துக்காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பாத்திரங்களின் இயல்புக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : குற்றாலக் குறவஞ்சி.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்**

- குற்றாலக் குறவஞ்சி எனும் இலக்கியம் பற்றி அறிந்து கூறுவார்.
- செய்யுள்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- செய்யுள்களைக் கொண்டுகூட்டி வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- செய்யுள்களில் காணப்படும் சிறப்புக்களை எழுதுவார்.
- செய்யுள்களில் காணப்படும் அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- செய்யுள்களை நயந்து நாடகமாக நடித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசம் ஒன்றினைத் திட்டமிடல்.
- குற்றாலக் குறவஞ்சி பற்றிய அறிமுகத்தினை வழங்கல்.
- பாடல்களைப் பதம்பிரிக்கச் செய்து வாசிக்கவிடல்
- பாடல்களில்வரும் அரும்பதங்களுக்குப் பொருள் கூறச் செய்தல்.
- பாடலின் பொருளைக் கூறச் செய்தல்.
- பாடல்களில் வரும் அணிகளை விளக்குதல்.
- குழுக்களாகப் பிரித்து பாடல்களை இசையோடு பாடச் செய்தல்.
- கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து நாடகமாக நடிக்கச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- நாயக்கர் கால இலக்கியம்.
- திரிகூட இராசப்ப கவிராயர் இயற்றியது.
- குற்றாலக் குறவஞ்சி பற்றிய விடயங்கள்.
- வசந்த வல்லியும் குறத்தியும் உரையாடும் பகுதி.
- குறத்தியினது நாட்டுவளம், நகர்வளம் கூறும் பகுதி.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- காகிதாதிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- குற்றாலக் குறவஞ்சிபற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களை சந்தி பிரித்து எழுதுவார்.
- செய்யுள்களை கொண்டு கூட்டி எழுதுவார்.
- முதல் மூன்று பாடல்களில் காணப்படும் அரும்பதங்களை இனங்கண்டு, அதன் பொருளை எழுதிக் காட்டுவார்.
- பாடல்களில் காணப்படும் அணிகளின் பொருத்தப்பாட்டினை விளக்கிக் கூறுவார்.
- தான் விரும்பும் பாடலிரண்டிற்கு நயம் எழுதிக் காட்டுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பகுபதம், பகாப்பதம்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- பதம் என்றால் என்னவென்று கூறுவார்.
- பகுபதம், பகாப்பதம் என்பன பற்றி விளக்கம் கூறுவார்.
- பகுபத உறுப்புக்கள் பற்றி விளக்குவார்.
- பகுபத உறுப்புக்களைப் பிரித்துப் பெயரிடுவார்.
  - பகுதி
  - விகுதி
  - இடைநிலை
  - சாரியை
  - சந்தி
  - விகாரம்

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஒரு பந்தியைக் கொடுத்து மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- அப்பந்தியில் உள்ள பகாப்பதங்களையும் பகுபதங்களையும் குழுக்களாகச் சேர்ந்து இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட பகுபதங்களைப் பிரித்துப் பெயரிடச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- பந்தியில் உள்ள பதங்கள்.
- பந்தியில் உள்ள பதங்களைப் பகுபதம், பகாப்பதம் எனப் பிரித்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- கட்டுரை
- எழுதுதாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பதம் என்றால் என்னவென்று கூறுவார்.
- பகுபதம், பகாப்பதம் பற்றி விளக்குவார்.
- பகுபத உறுப்புக்கள் எத்தனை? அவை எவை? என்பதைப் பற்றி விளக்குவார்.
- பகுபத உறுப்புக்களுக்குப் பெயரிடுவார்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாகப், படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : அறிக்கை எழுதுதல்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- அறிக்கை எழுத வேண்டிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார்.
- அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்களை எடுத்துக் கூறுவார்.
- அறிக்கைச் சட்டகத்தைத் தயாரிப்பார்.
- நடைமுறை வாழ்க்கையில் அறிக்கை எழுதும் போது முறையாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- அறிக்கை என்றால் என்ன?
  - அதில் அடங்கும் முக்கிய அம்சங்கள் / அறிக்கையின் அமைப்பு.
  - அறிக்கை எழுதும் படிமுறைகள் என்பன பற்றி விபரித்தல்.
- வேறொரு மாணவனை அழைத்து அன்று காலை நடைபெற்ற காலைக்கூட்டம் தொடர்பாக தொகுத்துக் கூறச் செய்தல்.
- அதனை எவ்வாறு அறிக்கையாக்கலாம் எனக் கூறுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி கலந்துரையாடச் செய்து சட்டகம் தயாரிக்குமாறு பணித்தல்.
- மாணவரகளைப் படைப்புக்களை முன்வைக்கச் செய்து ஆலோசனைகளை வழங்கல்.
- தனித்தனியாக மாணவர்மன்ற அறிக்கையினை எழுதச் செய்தல்.
- பொருத்தமான மதிப்பீடு, கணிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- அறிக்கை என்பது பற்றிய விளக்கம்.
- அறிக்கையில் இடம்பெற வேண்டிய விடயங்கள்.
- அறிக்கை தயாரிக்கும் முறைகள்.
    - தகவல் திரட்டுதல்
    - வாசித்தல்
    - உசாவுதல்
    - செவிமடுத்தல்
    - செவ்விகாணுதல்
    - குறிப்பெழுதுதல்
    - மாதிரி அறிக்கைகளை வாசித்துக்காட்டுதல்
- அறிக்கை எழுதுவதற்கான படிமுறைகள்.
    - முக்கிய அம்சங்களைக் குறித்துக்கொள்ளல்.
    - குறிப்புக்களை ஒழுங்குபடுத்தல்.
    - முன்னுரையை எழுதுதல்.
    - பிரதான அம்சங்களைப் பந்திகளாக அமைத்தல்.
    - முக்கிய செய்திகளைத் தொகுத்து சுருக்கமான முடிவுரை எழுதல்.

- கவனிக்க வேண்டிய விடயங்கள்.
    - யாருக்கு எழுதப்படுகின்றது?
    - எப்பொருள் பற்றியது
    - எழுதுபவரின் ஒப்பம், பதவி, இடம், திகதி என்பன

- மாதிரிச் சட்டகம். (பரிசளிப்புவிழா பற்றிய அறிக்கை)
    - அறிமுகம்
    - இடம், காலம்
    - பிரதம விருந்தினரை வரவேற்றல்
    - தமிழ்த்தாய் வாழ்த்து
    - வரவேற்புரை
    - அதிபரின் உரை
    - கலை நிகழ்ச்சிகள்
    - பிரதம அதிதியின் உரை
    - பரிசில் வழங்குதல்
    - நன்றியுரை
    - நிறைவு

- செம்மையாக அமைக்கும் வழிமுறை.
    - சட்டகத்துக்கு அமைவாக இடம், காலம், நேரம் குறிப்பிடப்படல்
    - யாரால் யாருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது
    - எவ்விடயம் தொடர்பானது
    - சுருக்கமும் தெளிவும்
    - முழுச் செயற்பாடுகளும் உள்ளடங்கும் நிகழ்ச்சிகள், படிமுறையாக, வரிசைக்கிரமமாக அமைதல்
    - நம்பகத் தன்மையுடையதாக இருத்தல்
    - தேவைக்கதிகமான வர்ணிப்பு அற்றதாக அமைதல்
    - கையொப்பம், உறுதிப்படுத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- அறிக்கை எழுதும் பல்வேறு சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார்.
- அறிக்கை ஒன்றில் அமைய வேண்டிய அம்சங்களை எடுத்துக்கூறுவார்.
- அறிக்கைக்கான சட்டகத்தைத் தயாரிப்பார்.
- அறிக்கையைச் செம்மையாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற மனப்பாங்கைப் பெறுவார்.
- நடைமுறைத் தேவைளுக்காக அறிக்கை எழுதும் ஆற்றலைப் பெறுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.2** : சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இடைச்சொல்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- இடைச்சொல் பற்றிய விளக்கத்தை அறிந்து கூறுவார்.
- இடைச் சொற்களின் வகையை அறிந்து கூறுவார்.
- உம், ஓ, ஏ, தான் எனும் இடைச் சொற்கள் பயன்படும் முறையினை அறிந்து கூறுவார்.
- வாசிக்கும் விடயத்தில் காணப்படும் இடைச் சொற்களை இனங்கண்டு பட்டியற்படுத்துவார்.
- பல்வேறு தேவைகளுக்காக எழுதும் போதும், இடைச் சொற்களைக் கையாண்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாட அறிமுகத்தினைப் பொருத்தமான முறையில் வெளிக்கொண்டு வருவார். மாணவர்களின் முன்னறிவைக் கண்டுகொள்வதற்கு வீடியோக்கள் பயன்படுத்தப் படலாம்.
- பல வகைச் சொற்களைப் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்தல்.
- இது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வினாக்களை முன்வைத்தல், சொற்களை இனங்காணச் செய்தல்.
- விடைகளை முன்வைக்கச் செய்தல்.
- மீண்டும் கலந்துரையாடி இடருறு பகுதிகள் தொடர்பாக விளக்கத்தினைக் கொடுத்து சந்தேகத்தினை தெளிவடையச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

உ-ம்

தம்பி வந்தான், அண்ணன் வந்தான்.

இறைச்சி சாப்பிடுவான், மீன் சாப்பிடுவான்.

ஓ - இன்றைக்கு அதிபர் வருவாரோ?

நீ படிக்கிறாயோ படம் பார்க்கிறாயோ ?

ஏ - மின்வெட்டும் நேரம் மின்சாரம் போலவே வந்தான்.

நான் - நான்தான் இதைச் செய்தேன்.

அம்மாதான் கறி சமைத்தார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- டிமைன்தாள்
- வீடியோ
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- முன்வைக்கப்படும் சொற்றொடர்களில் காணப்படும் இடைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- சொற்றொடர்களை இடைச்சொற்களைக் கையாண்டு இணைத்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 10.0** : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்றொடர் வகை.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- வாக்கியங்களின் இயைபு பற்றி அறிந்து துலங்குவார்.
- சொற்கள் தொடரும் ஒழுங்குமுறையில்தான் அவ்வாக்கியங்களின் கருத்துப் புலப்படுமென்பதை எடுத்துக் கூறுவார்.
- எழுவாய், பயனிலை இயைபினை அறிந்து பிரயோகிப்பார்.
- இவற்றைப் பயன்படுத்துவதினூடாக வாக்கியங்களை இயைபுற அமைத்து எழுதுவார்.
- வாக்கிய இயைபினைத் தமது பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கிய உறுப்புக்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடிப் பொருத்தமான பாடப்பிரவேசம் செய்தல்.
- முழு வாக்கியமாகப் பேசும் போதும் எழுதும் போதும் கருத்துப் புலப்படுமென்பதை விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, வாக்கிய இயைபினை விளக்கும் வகையில் பயிற்சிகளை வழங்குதல்.
- மாணவர்கள் எழுதியவற்றை முன்வந்து வாசிக்கும்படி செய்தல்.
- பயிற்சி வினாக்களை வழங்கி கணிப்பீடு, மதிப்பீடு செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- ஒரு வாக்கியத்தின் கருத்து எழுமிடம் - எழுவாய்
  ஒரு வாக்கியத்தின் கருத்து முடிவாகவும், பயனாகவும் உள்ள இடம் - பயனிலை
- சொற்கள் தொடரும் ஒழுங்கில்தான் கருத்துக்கள் புலப்படும்.
  உ-ம்: கண்டான், பெண்ணை, தரகன் - இயைபற்றது
  தரகன் பெண்ணைக் கண்டான் - இயைபுள்ளது

  தரகன் - எழுவாய் (கருத்துத் தொடக்கம்)
  கண்டான் - பயனிலை (கருத்து முடிவு)

- எழுவாய்க்கேற்ற பயனிலை இயைபு (திணை, பால், எண், இடம், காலம்) அவசியம்.

உ-ம் :

| பிழையானவை | - | சரியானவை |
|---|---|---|
| நாம் வரவேற்றேன் | - | நாம் வரவேற்றோம் |
| அவன் வரவேற்றது | - | அவன் வரவேற்றான் |
| அது வரவேற்றான் | - | அது வரவேற்றது |
| நீங்கள் வரவேற்றாய் | - | நீங்கள் வரவேற்றீர்கள் |
| நீ வரவேற்றான் | - | நீ வரவேற்றாய் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- செயற்பாட்டுப்பத்திரம்
- எழுதுதாள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கிய இயைபு பற்றி அறிந்து கூறுவார்.
- வாக்கியங்களைப் பிழையின்றி, எழுவாய், பயனிலை இயைபுடன் எழுதுவார்.
- சொற்கள் தொடரும் ஒழுங்குமுறையில்தான் வாக்கியங்களின் கருத்துப் புலப்படுமென்பதை எடுத்துக்கூறுவார்.
- வாக்கிய இயைபினை அறிந்து பிரயோகிப்பார்.
- பேச்சிலும் எழுத்திலும் வாக்கிய இயைபினைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கம்ப்யூட்டர்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- சிறுகதையில் அமைய வேண்டிய அம்சங்களை அறிந்து கூறுவார்.
- 'கம்ப்யூட்டர்' என்ற சிறு கதையின் கருவைப் பற்றி விபரிப்பார்.
- இக்கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்பினை எழுதிக் காட்டுவார்.
- சிறுகதையொன்றின் வெற்றிக்கு மொழிநடை இன்றியமையாதது என்பதை உணர்ந்து பொருத்தமான மொழி நடையைக் கையாள்வார்.
- சிறுகதைக்கான விமர்சனம் எழுதுவார்.
- சிறுகதையொன்றை ஆக்கும் திறனைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர் ஒவ்வொருவரையும் 'கம்ப்யூட்டர்' என்ற சிறு கதையை வாசிக்கச் செய்தல்.
- கருவை விளக்குதல்.
- கதைக் கருவுக்கும் தலைப்புக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை விளக்குதல்.
- கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்பை எடுத்துக் காட்டுதல்.
- மொழி நடை பற்றிக் கூறல்.
- சிறுகதை பற்றிய வினாவுக்கு விடையெழுத வைத்தல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- சிறுகதையாசிரியின் நோக்கம் பற்றிய விபரம்.
- சிறுகதை அளவிற் சிறியது. (குறுகிய காலத்துள் வாசித்து முடிக்கக் கூடியதாயிருத்தல்)
- குறைந்தளவிலான கதாபாத்திரங்களே இடம்பெறுதல்.
- கதைக்கரு, அதற்குப் பொருத்தமான கதைக்களம் இருத்தல்.
- மொழிநடை - வாசகரைக் கவரும் நடை
- யதார்த்தப் பண்புகள்

**பின்வரும் சொற்களின் பொருளைத் தேடி அறிக**

- படிப்பினை
- கல்லுளிமங்கன்
- சப்பளிந்து
- வீர்யம்

- ட்ரைப்
- சமாச்சாரம்
- ப்ளாப்பி
- மெகாபைட்
- சொப்ட் வேர்
- இண்டர்பேஸ்
- யூபிஎஸ்
- ஆக்ஞைப்படி
- பரணி
- ரெமிங்டன்
- அட்ச இருதயம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூலிலுள்ள சிறுகதை
- கம்ப்யூட்டர் படங்கள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- எழுது கருவிகள்
- எழுது தாள்கள்

**கணிப்பீடும், மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- 'கம்ப்யூட்டர்' கதையின் கருவை எழுதிக் காட்டுவார்.
- கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்பை விளக்கிக் காட்டுவார்.
- தலைப்பின் பொருத்தப்பாட்டைப் பற்றி விளக்குவார்.
- மொழிநடை பற்றி கூறுவார்.
- சிறுகதையொன்றினை ஆக்குவார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : நாட்டார்பாடல்கள்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- நாட்டார்பாடலின் அமைப்பு, உள்ளடக்கம் பாடியவர், பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களைப் பொருள் விளங்கத்தக்க வகையில் வாசிக்கும் திறனைப் பெறுவார்.
- பாடல்களின் உள்ளடக்கம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் பற்றி விளங்கிக் கூறுவார்.
- பாடல்களை நயந்து வெளிப்படுத்துவார்.
- பாடல்களில் காணப்படும் விழுமியப் பண்புகள், படிப்பினைகளைப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களைக் குழுக்களாக்கிப் பாடல்களை வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழு நிலையில் இசையோடு பாடச் செய்தல்.
- பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாடல்களில் நயப்பிற்குரிய பகுதிகளை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- பாடல்களின் பொருள் தொடர்பாக அபிப்பிராயங்களைக் கேட்டல்.
- மாணவர்களைக் கணிப்பிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- நாட்டார்பாடல்களைப் பாடியவர் யார்? என்பது அறியப்படவில்லை.
- இவை செவிவழியாகப் பேணப்பட்டு வந்த பாடல்கள்.
- இவை மரபு சார்ந்தவை.
- எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாட்டியல் அனைத்துமே நாட்டார் வழக்காற்றியலாகும்.

இங்கு ஏர்ப்பாடல், நாற்று நடுகைப் பாடல், மீன்பிடிப் பாடல், காதல் பாடல் என்பன தரப்பட்டுள்ளன.

மேழி - ஏர்

ஐலசா, ஏலேலோ - மீனவ வழக்குச் சொற்கள்

ஒலிக்குறிப்புச் சொற்கள்

வங்கிசம் - வம்சம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- அகராதி
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடல்களில் காணப்படும் பிரதேச வழக்குகளை அறிந்து கூறுவார்.
- பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுவார்.
- பாடல்களில் வரும் விழுமியப்பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.
- பாடல்களின் பொருளை எடுத்துக் காட்டுவார்.
- பாடலில் நயந்த விடயங்களைப் பட்டியற்படுத்தி அவை தொடர்பான விளக்கங்களை வழங்குவார்.
- பாடல்களில் வரும் தொழில் முறைகளை விளக்கிக் காட்டுவார்.

**தேர்ச்சி 8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தற்குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** வாக்கியங்கள் அமைத்தல்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற்பேறுகள்**

- சொற்கள் சொற்றொடர்களைப் பற்றிய விளக்கங்களை அறிந்து கூறுவார்.
- தரப்படும் சொற்கள், சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியங்கள் ஆக்குவார்.
- வாக்கியங்கள் எழுதும் போது எழுத்துக்களுக்கிடையே ஏற்ற இடைவெளியிட்டு, நிறுத்தக்குறிகளுடன் நேர்த்தியாக எழுதுவார்.
- எழுத்துப் பிழை, இலக்கணப் பிழையின்றி அமைக்கும் திறனைப் பெற்றுப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- சொற்கள், சொற்றொடர்கள்,மரபுச்சொற்கள் என்பன தொடர்பான பாடநூல்.
- விளக்கங்களை(பொருத்தமான விதத்தில்) மாணவர்களைச் செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்களுக்குத் தேவையான இடத்தில் விளக்கங்களை வழங்குதல்.
- சொற்கள் சொற்றொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்குமாறு வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

| | | |
|---|---|---|
| சொற்கள் | : | ஒன்றின் குறியீடாக,பெயராக,வினையாக,உரியாக, இடையாக அமைவது. |
| சொற்றொடர் | : | கருத்து முற்றுப் பெறாமல் நிற்கும் சொற் கூட்டம். |
| வாக்கியங்கள் | : | கருத்து முற்றுப்பெற நிற்கும் சொற் கூட்டம். |
| மரபுச் சொற்கள் | : | இந்தப்பொருளை இச்சொல்லால் அழைப்பது என்ற வரன்முறைக்குள் வருவன. |
| மரபுத்தொடர் | : | நேர்ப்பொருளை உணர்த்தாமல் குறிப்புப் பொருளை உணர்த்தும் தொடர்கள். |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- பயிற்சிகள்
- அகராதிகள்
- ஒலிப்பதிவு நாடாக்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- சொற்கள், சொற்றொடர்கள் பற்றிய விளக்கங்களைப் பற்றிய விளக்கங்களை அறிந்து துலங்குவார்.
- தரப்படும் சொற்கள், சொற்றொடர்களைக் கொண்டு சுயமாக வாக்கியங்கள் அமைத்து எழுதுவார்.
- வாக்கியங்கள் எழுதும்போது எழுத்துக்களிடையே ஏற்ற இடைவெளி, நேர்த்தியுடன் எழுதுவார்.
- இலக்கண வழுவின்றியும் நிறுத்தற்குறிகள் இட்டும் எழுதும் திறனைப் பெறுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர் வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தனி வாக்கியம்.
கூட்டு வாக்கியம்.
கலப்பு வாக்கியம்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- வாக்கியங்கள் அமைப்பு அடிப்படையில் பல்வேறுபட்டதாக அமையும் என்பதை விளக்கிக் கூறுவார்.
- வாக்கியங்கள் அமைப்பு அடிப்படையில், தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம் என வகைப்படுத்தப்படும் என்பதைக் கூறுவார்.
- மேலே கூறப்பட்ட வாக்கியங்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறி அவற்றிற்கு உதாரணம் தருவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பல்வகை வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி பாடத்தை ஆரம்பித்தல்.
- காட்சிப்படுத்தியவை தொடர்பாகக் கலந்துரையாடல்.
- வாக்கிய வகை ஒவ்வொன்றையும் விளக்கி, உதாரணம் காட்டல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- ஓர் எழுவாயின் முற்றுப்பெற்ற ஒரேயொரு கருத்தை உணர்த்துவது தனி வாக்கியம் எனப்படும்.
- ஓர் எழுவாயும் பல பயனிலைகளும் அல்லது, பல எழுவாய்களும் பல பயனிலைகளும் கொண்டு அமைகின்ற வாக்கியம் கூட்டு வாக்கியம் எனப்படும்.
- தலைமை வாக்கியத்தோடு ஒரு சார்பு வாக்கியமோ அல்லது பல சார்பு வாக்கியங்களோ இணைந்து வருவது கலப்பு வாக்கியமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டை
- காகிதாதிகள்
- எழுதுகருவி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தனி, கூட்டு, கலப்பு வாக்கியங்களுக்கு வரைவிலக்கணம் கூறுவார்.
- வாக்கியங்களை இனங்கண்டு எழுதுவார்.
- ஆக்கங்களில் பொருத்தமான வாக்கிய வகையைப் பிரயோகித்து எழுதுவார்.

**தேர்ச்சி 8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறி முறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தற் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியங்கள் எழுதுதல்.

**பாடவேளைகள்** **:** 02

**கற்றற் பேறுகள்**

- வழங்கப்படுகின்ற சொற்களை அல்லது சொற்றொடர்களின் அமைப்புப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- சொற்களைக் கொண்டு வாக்கியங்களைத் தர்க்கரீதியாகக் கூறுவார்.
- எழுத்துப் பிழையின்றி வாக்கியங்களை எழுதுவார்.
- வாக்கியங்களில் காணப்படும் வழுக்களைத் திருத்தி எழுதுவார்.
- இலக்கண வழுக்களைத் திருத்தி எழுதுவார்.
- இலக்கண வழுவற்ற வாக்கியங்களை உரிய நிறுத்தற் குறிகளுடன் தமது ஆக்கங்களில் தெளிவாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- ஆசிரியர் சில சொற்களை மாணவருக்கு கூற மாணவர் ஒவ்வொருவரும் அச்சொற்களை வைத்து வாக்கியங்களை அமைத்துக் கூறல்.
- மாணவர் கூறிய வாக்கியங்களில் வழுக்கள் இருப்பின் ஆசிரியர் அவை பற்றிய விளக்கத்தைக் கொடுத்து திருத்தமுறக் கூறுவதற்கு வழிகாட்டுதல்.
- வழுவுள்ள வாக்கியங்கள் சிலவற்றை வழங்கி மாணவர்கள் அவற்றைத் திருத்திச் சரியாக எழுத வழி நடத்தல்.
- அவ்வாக்கியங்களை நிறுத்தற் குறியீடுகள் இட்டு மேலும் செவ்வையாக எழுத வழி நடத்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

வாக்கியங்கள் அமைப்பதற்குப் பொருத்தமான பயிற்சிகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்கள்
- எழுது தாள்
- எழுது கருவிகள்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கியங்களில் அமையும் சொற்களை அவற்றின் வகைகளை இனம் கண்டு கூறுவார்.
- வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்வனவற்றை இனம் கண்டு பட்டியற்படுத்துவார்.
- சொற்களின் பொருளை அறிந்து, தமது ஆக்கங்களில் முன்வைப்பார்.
- தமது ஆக்கங்களை இலக்கண வழுவின்றி நிறுத்தக் குறியீடுகளுடன் எழுதுவார்.

**தேர்ச்சி 10.0** : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : வழுக்களின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கிய இயைபு

- திணை
- பால்
- எண்
- இடம்
- காலம்

என்பன இயைபுபட வாக்கியம் அமைத்தல்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- வாக்கிய இயைபு பற்றி அறிந்து எழுதுவார்.
- இருதிணை, ஐம்பால், மூவிடச்சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.
- ஒருமை, பன்மை,காலங்கள் பற்றிய விளக்கங்களை அறிந்து துலங்குவார்
- இவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை இயைபுற அமைத்து எழுதுவார்.
- வாக்கிய இயைபை அறிந்து ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சில சொற்களைக் கரும்பலகையில் எழுதி அவை தொடர்பாகக் கலந்துரையாடல்.

உதாரணம் :

- மாணவர்கள், மன்னன், செல்வி, கதிரை, காகங்கள், பசு, நண்பர்கள், கல், மக்கள், மரம் இவற்றில் உயர் திணை, அ∴றிணைச் சொற்களை இனங் காணச் செய்தல்.
- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால் சொற்களைக் கூறச் செய்தல்.
- ஒருமை பன்மைச் சொற்களை இனம் காணச் செய்தல்.
- செயற்பாட்டுப் பத்திரம் வழங்கி மாணவர்களை விடை எழுத வழிகாட்டல்.
- செயற்பாட்டு பத்திரத்தை முன்வைக்கச் செய்தல் ஏனைய மாணவர் குழுக்களை கருத்துக்களைக் கூறச் செய்தல்.
- விரிவான விளக்கம் வழங்குதல்.
- கணப்பிடலும் மதிப்பிடலும்.

**முதன்மைப் பதங்கள் (Key words) எண்ணக்கருக்கள்**

- திணை : இடம், சாதி, ஒழுக்கம் என பல பொருள் குறிக்கம் இலக்கண அளவில் சாதி என்பதே பொருந்துவதாகும்
- உயர்திணை : உயர்வாகிய சாதி(பகுத்தறிவு உள்ள மனிதர் தேவர் நரகர்)
- அ∴றிணை : (அல் + திணை) அ∴றிணை (பகுத்தறிவற்ற உயிரினங்களும் உயிரற்ற பொருட்களும்)

திணை

| | உயர்திணை | அ∴றிணை |
|---|---|---|
| **உ-ம்** | மனிதர், தேவர், நரகர் | மரம், கல், பசு, பறவைகள் |

**பால்** : பால் என்பது பகுதி எனப் பொருள்படுகிறது.
திணை என்னுந் தொகுதியே பால் எனும் பகுதிகளை கொண்டுள்ளது.
திணை அடிப்படையில் பால் பகுக்கப்படுகிறது.

திணை

| **உயர்திணை** | | | **அ∴றிணை** | |
|---|---|---|---|---|
| **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** | **ஒன்றன்பால்** | **பலவின்பால்** |
| மகன் | மகள் | மக்கள் | பசு | பசுக்கள் |
| ஆசிரியன் | ஆசிரியை | ஆசிரியர்கள் | கோழி | கோழிகள் |
| | | | வீடு | வீடுகள் |
| | | | மரம் | மரங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரம்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கிய இயைபு பற்றி அறிந்து கூறுவர்.
- வாக்கியங்களை பிழையின்றி இயைபுடன் எழுதுவர்.
- இருதிணை, ஐம்பால், மூவிடச் சொற்களை அறிந்து பிரயோகிப்பர்.
- ஒருமை, பன்மை, காலங்கள் பற்றிய விளக்கங்களை அறிந்து துலங்குவர்.
- இவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை இயைபுற எழுதுவர்.
- வாக்கியங்களை இயைபுபட எழுதி ஆக்கங்களை முன்வைப்பர்.

# மூன்றாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 7.0 | 7.1 | இராமாயணம் - பரதன் முதலானவர்கள் கங்கையைக் கடந்தமை (குகப்படலம்) | 7 | 90 |
| 2 | 13.0 | 13.3 | சொற்புணர்ச்சி | 4 | 92 |
| 3 | 10.0 | 10.2 | பந்தி எழுதுதல். | 2 | 94 |
| 4 | 11.0 | 11.1 | கட்டுரை எழுதுதல் | 4 | 96 |
| 5 | 4.0 | 4.2 | எது நல்ல சினிமா? | 3 | 98 |
| 6 | 1.0 | 1.3 | மேடைப்பேச்சு / சொற்பொழிவு | 2 | 102 |
| 7 | 13.0 | 13.3 | தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் | 5 | 101 |
| 8 | 2.0 | 2.1 | தத்தைவிடு தூது | 7 | 105 |
| 9 | 12.0 | 12.2 | தொகைச் சொற்கள் | 2 | 107 |
| 10 | 4.0 | 4.1 | முடிவுறாக் கதைகள் | 3 | 109 |
| 11 | 13.0 | 13.3 | வேற்றுமைகள் | 5 | 111 |

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 7.0** | : | இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். |
| **தேர்ச்சி மட்டம் 7.1** | : | படைப்புக்களை வாசித்து நயப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | இராமாயணம் - பரதன் முதலானவர்கள் கங்கையைக் கடந்தமை. (குகப்படலம்) |
| **பாடவேளைகள்** | : | 07 |

**கற்றற் பேறுகள்**

- இராமாயணம் பற்றிய விபரங்களை அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- பாடல்களில் இடம்பெறும் அணிகள் பற்றி விளக்கி எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் நயந்தவற்றை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கம்பர் பற்றி கலந்துரையாடி விளக்குதல்.
- இராமாயணக் கதை பற்றி விபரித்தல்.
- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிக்கச் செய்தல்.
- பாடல்களைக் கொண்டு கூட்டி வாசிக்கச் செய்தல்.
- பாடல்களின் அரும்பதங்களின் பொருள் விளக்கம்.
- பாடல்களின் பொருளைச் சொந்த மொழி நடையில் எழுதச் செய்தல்.
- அணிச் சிறப்புக்களை விளக்குதல்.
- நயந்த பகுதிகளை விளக்கச் செய்தல்.
- மாணவர்களைக் கணிப்பிடவும், மதிப்பிடவும் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- இராமாயணம் இயற்றியவர்கள்

| **வடமொழி** | **தமிழில்** |
|---|---|
| வான்மீகி - வான்மீகி இராமாயணம் | கம்பர் - கம்பராமாயணம் |
| வசிட்டர் | |
| போதாயணர் | **இந்தியில்** |
| | துளசிதாசர் - துளசிராமாயணம் |

- கதையில் வேறுபாடுகள் உண்டு.

**காண்டம், படலம்**

காண்டம் : பெரும்பகுதி (ஒரு காப்பியத்தின் பிரிவு)
படலம் : சிறு பகுதி (காண்டத்தின் பிரிவு)

**அயோத்தியா காண்டம்**

இராமாயண காப்பியத்தில் அயோத்தி மாநகரிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் நடைபெறும் சம்பவங்களை உள்ளடக்கிய பகுதி இதுவாகும்.

தனது மூத்த மைந்தனான இராமனுக்குத் தசரதன் முடிசூட்ட ஏற்பாடு செய்தலும், கைகேயி தசரதனிடம் வரங்கேட்டலும், அதன் பின்னர் இராமன் முடிசூடாமல் கானகம் செல்வதும், அவனைத் தேடி மற்றவர்கள் செல்லலுமாகிய சம்பவங்கள் அயோத்தியா காண்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

**குகப்படலம்**

கானகம் சென்ற இராமன் கங்கைக் கரைப் பரதவர் தலைவனாகிய குகனைக் கண்டு அன்பு கொண்டு செல்வதும், அவன் சென்ற பின்னர் அவனைத்தேடி பரதன் முதலியோர் செல்வதும், முதலில் அவன் வரவைச் சந்தேகித்த குகன் பின்னர் அன்பு கொண்டு அவர்களோடு உரையாடுவதும் உபசரிப்பதும் அவர்கள் கங்கையைக் கடக்க உதவுவதுமாகிய சம்பவங்கள் குகப்படலத்தில் உள்ளடங்குகின்றன. குகனது செயல்களை விளக்குவனவான படலம் ஆதலால் குகப்படலம் என அழைக்கப்படுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- இராமாயணக் காப்பியம் உரைநூல்
- டிமைன் தாள்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- இராமாயணம் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்துக் கொண்டு கூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- அணிச் சிறப்புக்களை இனங்கண்டு விபரிப்பார்.
- அரும்பதங்களின் பொருளை அகராதியின் துணைக்கொண்டு அறிந்து எழுதுவார்.
- பாடல்களில் நயந்தவற்றைத் தமது ஆக்கங்களில் முன்வைப்பார்.
- வேறு பாடல்களை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்புணர்ச்சி.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- புணர்ச்சி என்றால் என்ன என்பதை வரைவிலக்கண்பபடுத்திக் கூறுவார்.
- இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி, வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி, அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என்பவற்றை வகைப்படுத்தி விளக்குவார்.
- புணர்ச்சி வகைகளை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- புணர்ச்சி விதிகளை விளங்கி ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- புணர்ச்சியில் பயன்படும் முக்கிய பதங்களை விளக்குதல்.
  - நிலைமொழி வருமொழி
  - இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி
  - வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி
  - அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி
- புணர்ச்சி தோன்றும் விதங்களை விளக்குதல்.
- உதாரணங்களை முன்வைத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி அவர்களுக்குச் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குதல்.
- மாணவர்களை குழுநிலையில் கலந்துரையாடச் செய்தல்.
- மாணவர்கள் தமது செயற்பாட்டுப் பத்திரங்களை முன்வைக்கச் செய்தல்.
- மாணவர்கள் ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுக்கச் செய்தல்.
- தேவையான விளக்கம் அளித்தல்.
- மாணவர்களைக் கணிப்பிடலும் மதிப்பிடலும்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- ஒரு சொல்லின் உருபுகள், உறுப்புக்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.
- ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணரச்சி எனப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.

**புணர்ச்சி**

இயல்புப் புணர்ச்சி

விகாரப்புணர்ச்சி
- தோன்றல்
- திரிதல்
- கெடுதல்

**புணர்ச்சி**

வேற்றுமைப் புணர்ச்சி

அல்வழிப் புணர்ச்சி

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- புணர்ச்சி அட்டவணை
- டிமைன்தாள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- எழுதுதாள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- புணர்ச்சி என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவார்.
- புணர்ச்சிகளை வகைப்படுத்தி விளக்குவார்.
- புணர்ச்சி வகைகளை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- புணர்ச்சி விதிகள் இடம்பெறுமாறு தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 10.0** : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.2 :** கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** பந்தி எழுதுதல்.

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்**

- கூறப்படும் விடயத்தை அவதானமாகக் கேட்டுக் கிரகிப்பார்.
- கிரகித்த விடயத்தின் தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு கொள்ளுவார்.
- கிரகித்தவற்றில் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்தும் தேவையற்றவற்றை நீக்கியும் ஒழுங்குபடுத்திக் கொள்வார்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களை பந்தியாக பொருத்தமான குறியீடுகள் இட்டு எழுதுவார்.
- நேர்த்தியாக எழுதும் ஆற்றலைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- விடயத் தொடர்புள்ள சில வாக்கியங்களை வழங்கி அவற்றைத் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தி அமைக்குமாறு மாணவர்களை வழிப்படுத்தல்.
- பந்திகளை வழங்கி அவற்றில் தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களை மாணவர்கள் இனங்காண வழிகாட்டுதல்.
- பந்தி ஒன்று எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- குறிப்பிட்ட விடயம் தொடர்பான கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டவற்றைப் பந்திவடிவில் எழுத வழிப்படுத்தல்.
- கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- பந்தி என்பது ஒரு விடயத்தினை விளக்கிக் கூறுவதாக இருத்தல் வேண்டும்.
- குறிப்பிட்ட மையக்கருத்து ஒரு பந்தியில் இருத்தல் வேண்டும். பெரும்பாலும் பந்தியின் தலைமை வாக்கியம் அதுவாக இருத்தல் வேண்டும்.
- மையக் கருத்தை வலுப்படுத்துவதாக துணைக் கருத்துக்கள் இருத்தல் வேண்டும்.
- கருத்துத் தொடர்புடையனவாக, ஒழுங்கு முறையில் வாக்கியங்கள் அமையும்போது பந்தி சிறப்பானதாக அமையும்.
- எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற மொழிநடையில் விடயங்கள் கருத்துத் தெளிவுடன் கூறப்படுதல் அவசியம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரிப் பந்திகள்
- வாக்கியங்கள் அடங்கிய சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- ஒரு விடயம் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட தரவுகளை வைத்து பந்தியாக எழுதுவது பற்றிக் கலந்தரையாடுவார்.
- பந்தி ஒன்று எவ்விதம் அமையும் என்பதனை விளக்குவார்.
- குறிப்பிட்ட விடயம் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்திப் பந்தி எழுதுவார்.

**1. தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை எழுதுவார்.

**2. தேர்ச்சி மட்டம் 11.1** : பல்வேறு ஆக்கங்களை எழுதுவார்.

**3. விடய உள்ளடக்கம்** : கட்டுரை எழுதுதல்.

**4. பாடவேளைகள்** : 04

**5. கற்றற் பேறுகள்**

- கட்டுரை என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- கட்டுரையின் உறுப்புக்களை வகைப்படுத்துவார்.
- கட்டுரைக்கான சட்டகத்தை அமைக்கும் முறையை அறிந்து கூறுவார்.
- கட்டுரைக்கான தலைப்பை இடும் பயிற்சி பெறுவார்.
- தொடர்பு குன்றா வகையில் பந்திகளாக்கி எழுதுவார்.
- கட்டுரை எழுதுவதற்கான அம்சங்கள், மொழி நடை என்பவற்றை சிறந்த முறையில் கையாள்வார்.
- ஒரு விடயத்தின் பல்வேறு அம்சங்களைக் கோவைப்படுத்தி விளக்கக் கட்டுரையாக எழுதுவார்.

**6. பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஒரு கட்டுரையின் அம்சங்களை முன்வைத்தல்.
- ஒரு கட்டுரையின் அமைப்பைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- கட்டுரை எழுதும்போது அவதானிக்க வேண்டிய அம்சங்களை மாணவருடன் கலந்துரையாடுதல்.
- கொடுக்கப்பட்ட ஒரு விடயத்தை விளக்கி, கோவைப்படுத்தி எழுதுவதே விளக்கக் கட்டுரை எனல்.
- மாணவர் குழுக்களுக்குத் தலைப்புக்களை வழங்கி, விளக்கக் கட்டுரைகளை எழுதுவித்தல்.
- மேலும் தேவையான விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

1. கட்டுரையின் அமைப்பு
   (அ) முன்னுரை - (கட்டுரையில் இடம்பெற வேண்டிய விடயத்தினைக் முன்வைத்தல்)
   (ஆ) உடல் - (எடுத்துக்கொண்ட விடயத்தை விபரித்தல்)
   (இ) முடிவுரை - (எடுத்துக்கொண்ட விடயத்தைத் திரட்டிக் கூறுதல்)

**கட்டுரை ஒன்றில் அமைய வேண்டியவை**

- சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்.
- நன்மொழிப் புணர்ச்சி.
- ஆழமுடைமை.
- ஓசையுடைமை.
- நவின்றோர்க்கினிமை.
- முறையின் வைப்பு.
- உலகமலையாமை.
- விழுமியது பயத்தல்.
- விளங்குதாரணத்துக்காதல்.

**கட்டுரை ஒன்றில் அமையக் கூடாதவை**

- கூறியது கூறல்.
- மாறுபடக் கூறல்.
- மற்றொன்று விரித்தல்.
- சென்று தேய்ந்திறுதல்.
- நின்று பயனின்மை.

**கட்டுரை வகைகள்**

- தற்சார்புக்கட்டுரை. (உ-ம்: தான் இரசித்த தொலைக்காட்சி நாடகம்)
- விளக்கக் கட்டுரை. (உ-ம்: விஞ்ஞான விந்தைகள்)
- வருணனைக் கட்டுரை. (உ-ம்: பாடசாலையின் பொன்விழா நிகழ்வுகள்)
- கற்பனைக் கட்டுரை. (உ-ம்: மனிதன் செவ்வாயில் வாழ்ந்தால் .....)
- விவரணக்கட்டுரை. (உ-ம்: இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய மகாநாடு)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- டிமைன் தாள்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரைக்கு வேண்டியவற்றைக் குறித்துக் கொள்வார்.
- எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்றினை எழுதுவார்.
- கட்டுரை எழுதும்போது அவதானிக்க வேண்டியவற்றை அவதானித்து, தவிர்க்க வேண்டிய விடயங்களைத் தவிர்த்துக் கொள்வார்.
- கட்டுரை ஒன்றிற்கான சட்டகம் ஒன்றை அமைத்துக் கொள்வார்.
- அறிந்து கொண்ட படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்திச் சுயமாகக் கட்டுரை ஒன்றை எழுதுவார்.

**தேர்ச்சி 4.0 :** தமது எண்ணங்களைக் கேட்போர் உளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாகப் பொருள் செறிவோடு, பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார்.

**விடய உள்ளடக்கம் :** எது நல்ல சினிமா?

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள்**

- வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.
- தொடர்பான கருத்துக்களைச் உள்வாங்கி எழுதுவார்.
- பிரதான கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- துணைக்கருத்துக்களைச் சுருக்கியும், விரித்தும் கூறுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான அபிப்பிராயத்தை ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- தமது விமர்சனத்தை நேர்த்தியாக முன்வைப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரையை ஒவ்வொரு மாணவரும் வாசித்துக் கிரகிக்க வழிகாட்டுதல்.
- வாசித்துக் கிரகித்தவற்றைக் குறிப்பெடுக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, பொருத்தமான வினாக்களை வழங்கி, குழுச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்.
- மாணவர்களை தமது குழுச் செயல்பாடுகளை முன்வைக்க வழிகாட்டுதல்.
- கருத்துக்கள் தொடர்பான அபிப்பிராயங்களைக் கேட்டல்
- தேவையான விளக்கமளித்தல்.
- மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுதச் செய்தல்.
- மாணவர்கள் தங்கள் விமர்சனங்களை முன்வைக்க வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- கட்டுரையாசிரியர் நோக்குப் பற்றிய விபரம்.
- சினிமா பற்றியன அதன் தற்கால நிலைமை (குறிப்பாகத் தமிழ்ச் சினிமா) பற்றிய விபரங்கள் / விளக்கம்.
- சினிமா என்பது நாடகத்திற்கு அடிமைப்பட்டு இருந்த காரணத்தினால் தமிழ் நாட்டில் வளர்ச்சியில்லாமல் போய்விட்டது.

- சினிமா என்பது படமாக்கப்பட்ட நாடகமுமல்ல, பல்சுவை நிகழ்ச்சியுமல்ல. அது தனியான ஒரு கலை. சினிமா மொழியை அடிப்படையாகக் கொண்டது. அதற்குரிய அம்சங்கள் மூன்று.

  i காட்சிப் படிமங்கள் ii. ஒலி i. படத்தொகுப்பு
- காட்சிப் படிமங்களை இணைப்பதற்கும் பலமுறைகள் உண்டு.
- சினிமா மொழியைச் சிறந்த முறையில் கையாளும் போது அது வெற்றியடைகிறது. இந்தச் சினிமா மொழிக்கும் இலக்கணம் மரபு என்பன உண்டு.
- காட்சிப்படிமம் மூலம் சொல்லக்கூடிய ஒன்றைப் பேச்சு மூலம் காணபிக்க முயன்றதால் சினிமா வளரவில்லை.
- சினிமா மொழி குறியீடு போன்றவற்றினாலும் தொழில் நுணுக்க வளர்ச்சியினாலும் ஆக்கப்படுவது. அதற்கு உழைப்பும், பயிற்சியும், முயற்சியும் தேவை.
- சினிமா மொழி பரிச்சயமில்லாத ஒன்றாக இருப்பதனால் அதனை ரசிக்க முடிய வில்லை.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரை தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.
- பிரதான கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- பாடப்பகுதியின் துணைக் கருத்துக்களை சுருக்கியும், விரித்தும் கூறுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான அபிப்பிராயத்தை விளக்குவார்.
- விமர்சனத்தை நேர்த்தியாக முன்வைப்பார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்து துலங்குவார்

**தேர்ச்சி மட்டம் 1.3** : கேட்டுக் கிரகித்தவற்றை செம்மையாகக் கூறுவார்.

**விடய உள்ளடக்கம்** : மேடைப்பேச்சு / சொற்பொழிவு.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- மேடைப்பேச்சு என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- மேடைப்பேச்சு நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார்.
- கொடுக்கப்படும் தலைப்புக்கேற்ற பொருளை உள்ளடக்கி மேடைப்பேச்சை எழுதுந் திறன் பெறுவார்.
- அவையறிந்து கூற வேண்டியன பற்றி அறிந்து கூறுவார்
- மேடைப் பேச்சொன்றின் அமைப்பினை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மேடைப் பேச்சு பற்றி கலந்துரையாடல்.
- மேடைப்பேச்சு ஒன்று எழுதப்படும்போது அவதானிக்க வேண்டிய விடயங்களை விளக்கல்.
- இவ்வகைக் கட்டுரையில் அவையை விளித்துப் பேசும் சொற்கள் கையாளப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்கல்.
- மாணவர்களுக்கு விடயப்பரப்பை வழங்கி மேடைப்பேச்சை எழுதுவதற்கு வழிப்படுத்தல்
- எழுதப்பட்ட மேடைப்பேச்சை முன்வைக்கச் செய்து நிறைகளையும் குறைகளையும் ஆராய்தல் / சுட்டிக்காட்டுதல்.
- தேவையான விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- மேடைப் பேச்சொன்றின் அமைப்பு
  - (அ) சபையோரை விளித்து ஆரம்பித்தல்.
  - (ஆ) எடுத்துக்கொண்ட விடயங்களை விளக்கும்போது சபையை விளித்தல்.
  - (இ) மேடைப்பேச்சை முடிக்கும்போது நன்றி, வணக்கம் கூறி நிறைவு செய்வதாக அமைதல்.

- மேடைப்பேச்சை எழுதும்போது அவதானிக்க வேண்டியவை
  - (அ) அவையினருக்கு ஏற்ற விதத்திலான பேச்சு அமைப்பு.
  - (ஆ) பொருத்தமான சொற்கள், சொற்றொடர்கள், உதாரணங்கள், மேற்கோள்கள் முதலியவற்றைக் கையாளல்.
  - (இ) தலைப்புக்கேற்ற பொருள், பேச்சின் மையக் கருத்து, துணைக் கருத்துக்கள்.
  - (ஈ) நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தல்.
  - (உ) கவர்ச்சிகரமான நயம்மிக்க சொற்பிரயோகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- டிமைன்தாள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- எழுதுதாள்
- எழுது கருவிகள்
- மாதிரிப் பேச்சு அடங்கிய ஒலிநாடா

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- மேடைப் பேச்சு நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு பட்டியற்படுத்துவார்.
- கொடுக்கப்படும் தலைப்புக்கேற்ற பொருளை உள்ளடக்கி மேடைப்பேச்சை நிகழ்த்திக் காட்டுவார்.
- மேடைப் பேச்சொன்றின் அமைப்பினை விபரித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தொகை நிலைத்தொடர்.
தொகா நிலைத்தொடர்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்**

- தொகா நிலைத் தொடர், தொகை நிலைத் தொடர் என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- உருபுகள் மறைந்தும், மறையாமலும் நிற்கும் வகையினை இனங்கண்டு பயன்படுத்துவார்.
- தொகா நிலைத் தொடர்களின் வகைகளைக் கூறுவார்.
- தொகை நிலைத் தொடர்களின் வகைகளைக் கூறுவார்.
- தொகை நிலைத் தொடர்ப் பாகுபாட்டை அறிந்து விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- தொகை நிலைத் தொடர், தொகா நிலைத் தொடர் என்பவற்றை விளக்குதல்.
- உருபுகள் மறைந்து நிற்பதையும் வெளிப்படையாக நிற்பதையும் எடுத்துக் காட்டி விளக்கல்.
- தொகை நிலைத்தொடர் ப்டடியற்படுத்தி விளக்குதல்.
- தொகை நிலைத் தொடர் பாகுபாட்டுக்கு விளக்கம் கொடுத்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- ஒரு சொல்லை இன்னொரு சொல் தொடர்ந்து வருவது தொடர்கள் எனப்படும்.
- தொடர்கள் இரண்டு விதமாக அமைந்து பொருள் உணர்த்தும்.

உ-ம்: நான் கவிதை இயற்றினேன்.
நான் கவிதையை இயற்றினேன்.

- இவ்விரண்டு வாக்கியங்களும் உணர்த்தும் பொருள் ஒன்றாய் இரப்பினும், அமைப்பில் அவை இரண்டும் வேறுபட்டுள்ளன. கவிதை என்னும் சொல்லுடன் ஐ உருபு சேர்ந்து வராமல், முதலாம் வாக்கியம் உணர்த்திய அதே பொருளை இரண்டாம் வாக்கியம் கவிதை என்னும் சொல்லுடன் ஐ சேர்த்து உணர்த்தியுள்ளது.

  இவ்வாறு, கவிதை எழுதினான்.

  கவிதையை எழுதினேன்.

  என்னும் இரண்டு தொடர்களையும் நோக்குமிடத்து,

  முதலாவது தொடர் தொகை நிலைத் தொடராகவும்

  இரண்டாவது தொடர் தொகா நிலைத் தொடராகவும் வருவதைத் காணலாம்.

**தொகை நிலைத் தொடர்கள்**

- ஒரு சொல்லை இன்னொரு சொல் தொடர்ந்து வரும்போது உருபுகளோ சொல்லுருபுகளோ மறையாமல் (தொகாமல்) நிற்கும் தொடர் தொகா நிலைத் தொடர் எனப்படும்.
- தொகை நிலைத் தொடர்கள் ஒன்பது வகையாகும்
  1. எழுவாய் தொடர்
  2. விளித்தொடர்
  3. வேற்றுமைத் தொடர்
  4. வினைமுற்றுத் தொடர்
  5. பெயரெச்சத் தொடர்
  6. வினையெச்சத் தொடர்
  7. இடைச் சொற்றொடர்
  8. உரிச் சொற்றொடர்
  9. அடுக்குத்தொடர்

**தொகை நிலைத் தொடர்கள்**

- ஒரு சொல்லை இன்னொரு சொல் தொடர்ந்து வரும்போது உருபுகளோ சொல்லுருபுகளோ மறைந்து (தொக்கி நிற்கும் தொடர் தொகை நிலைத் தொடர் எனப்படும்.

- இது ஆறு வகையாகும்
    1. வேற்றுமைத் தொகை
    2. வினைத் தொகை
    3. பண்புத் தொகை
    4. உவமைத் தொகை
    5. உம்மைத் தொகை
    6. அன்மொழித் தொகை

    ஒவ்வொரு வகையையும் விளக்குதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- வாக்கியங்கள் அடங்கிய அட்டைகள்
- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- எழுதுதாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தொகா நிலைத் தொடர், தொகை நிலைத் தொடர் என்றால் என்ன என்பதை கூறுவார்.
- உருபுகள் மறைந்தும் மறையாமலும் நிற்பதை இனங்கண்டு எழுதிக்காட்டுவார்.
- தொகை நிலைத் தொடர் எத்தனை வகையென்பதையும் அதற்கான உதாரணங்களையும் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : தத்தைவிடு தூது.

**பாடவேளைகள்** : 07

**கற்றற் பேறுகள்**

- செய்யுள் ஆசிரியர் (புலவர்) பற்றி அறிந்து விளக்குவார்.
- சிற்றிலக்கிய வடிவங்களை அறிந்து கூறுவார்.
- தூது இலக்கிய வடிவம், அதன் பண்புகள் பற்றி அறிந்து எழுதுவார்.
- செய்யுள்களைச் சந்திபிரித்து, கொண்டு கூட்டி வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- செய்யுள்களில் காணப்படும் சிறப்புக்களை எழுதுவார்.
- செய்யுளகளில் காணப்படும் அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- செய்யுள்களை நயந்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களுடன் பாரம்பரிய கவிதைகள் / செய்யுள்கள் பற்றியும் கவிஞர்கள் / புலவர்கள் பற்றியும் கலந்துரையாடுதல்.
- சிற்றிலக்கியம், தூது இலக்கியம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- செய்யுள்களைச் சந்தி பிரித்து , கொண்டு கூட்டி வாசிக்கச் செய்தல்.
- செய்யுள்களின் பொருள், நயம் போன்றவற்றை இனங்காணச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, குழுவேலைகளைத் திட்டமிடுதல்.
- குழுவேலைகளின் அடிப்படையில் மாணவர்கள் செய்யுள்களைக் கிரகிக்க வழிப்படுத்தல்.
- மாணவர்கள் குழுவேலைகளை முன்வைக்க வழிப்படுத்தல்.
- செய்யுள் அணிகள், சொல்லாட்சிகள் பற்றிய கருத்துக்களை முன்வைக்க வழிகாட்டுதல்.
- செய்யுள்களை நயந்து எழுதுவதற்கு வழிகாட்டுதல்.
- மாணவர்கள் நயந்து எழுதிய பகுதிகளை முன்வைப்பதற்கு வழிகாட்டுதல்.
- கணிப்பீடு, மதிப்பீடு செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கருக்கள்**

- தி. த. சரவணமுத்துப்பிள்ளை புலவர் பற்றியும் அவரது ஆக்கங்கள் பற்றியும் கூறச் செய்தல்.
- சிற்றிலக்கிய வடிவங்கள் பற்றி விளக்கம்.

  சிற்றிலக்கியங்களாகப் புலவர்களால் பாடப்பட்டுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு அவற்றுள் உலா, பள்ளு, பரணி,பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, குறவஞ்சி என்பவவை பிரசித்தமானவை. சங்ககாலத்திலே தலைவன் தலைவியரிடையே பாங்கன், பாங்கி (தோழர், தோழி) தூது சென்றமை போல பிற்காலத்தில் தலைவன் தலைவியரிடையே கிளி, மயில், அன்னம், மேகம் என்பவை தூதுபோகச் செய்யப்பட்டன. இங்கே மகாகவி பாரதிக்கு முற்பட்ட காலத்தவரான தி. த. சரவணமுத்துப்பிள்ளை மகாகவி பாரதியைப் போல் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான தனது கருத்துக்களை முன்வைக்கின்றார். பாரம்பரியப் புலமைத் திறத்தில் நவீன எண்ணக்கருத்துக் களைக் காணலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல் செய்யுள் பகுதிகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- புலவர் பற்றி அறிந்து கூறுவார்.
- சிற்றிலக்கிய வடிவங்களை அறிந்து விளக்குவார்.
- தூது இலக்கிய வடிவம், அதன் பண்புகள் பற்றி அறிந்து எழுதுவார்.
- செய்யுள்களை செம்மையாக வாசித்துக் காட்டுவார்.
- செய்யுள்களை சந்தி பிரித்தும், கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- செய்யுள்களில் காணப்படும் சிறப்புக்களை எழுதுவார்.
- செய்யுள்களில் காணப்படும் அணிகளை இனங்கண்டு விளக்குவார்..
- செய்யுள்களை நயந்து கருத்துக்களை முன்வைப்பார்.
- சீர்திருத்தக் கருத்துக்களைத் தமது வாழ்வில் பின்பற்றுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தொகைச் சொற்கள்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- தொகைச் சொற்கள் பற்றிக் கூறுவார்.
- தொகைச் சொற்களை இனங்காண்பார்.
- தொகைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தை விருத்தி செய்வார்.
- தொகைச் சொற்களைத் தமது ஆக்கங்களில் உரிய முறையில் பிரயோகிப்பார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர் ஏற்கனவே அறிந்த தொகைச் சொற்களைக் கூறச் செய்தல்.
- தொகைக் சொற்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுதல்.
- தொகைச் சொற்கள் என்றால் என்ன? என்பதை விளக்குதல்.
- தொகைச் சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குதல்.
- தொகைச் சொற்களைப் பொருத்தமுற ஆக்கங்களில் கையாள்வது பற்றி விளக்கல்.
- குழுநிலையில் இயங்கி தொகைச் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுவது பற்றி கலந்துரையாடச் செய்தல், ஆலோசனை வழங்குதல்.
- தனித்தனியாக இயங்கி தொகைச் சொற்களின் பொருளையும், தொகைச் சொற்களையும் பட்டியலிடச் செய்தல்.
- கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- தொகைச் சொற்கள் பற்றிய விளக்கம்.
- தொகைச் சொற்களின் பயன்பாடு.

தொகைச் சொற்கள் சில.

இருசுடர் - சூரிய சந்திரர்

முக்கனி - மா, பலா, வாழை

நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தலைமட்ட மேல் ஒளிக் கதிர் கருவி (OHP)
- பாடநூல்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தொகைச் சொற்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- தொகைச் சொற்களின் வகைகளை இனங்கண்டு எழுதுவார்.
- தொகைச் சொற்களின் விரிவான பொருளை அறிந்து விபரிப்பார்.
- தொகைச் சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- தொகைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுவார்.
- தொகைச் சொற்களை உரிய முறையில் பிரயோகித்து ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 4.0** : கேட்போர் உளங்கொளத்தக்க வகையில் தமது எண்ணங்களை எடுத்துரைப்பார்

**தேர்ச்சி மட்டம் 4.1** : ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார்

**விடய உள்ளடக்கம்** : முடிவுறாக் கதைகள்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- வழங்கப்படும் விடயத்தை தொடர்ந்து விரித்துக் கூறுவார்.
- வழங்கப்படும் விடயத்தில், சொல், சொற்றொடர்கள் தொடர்பான விபரிப்புக்களைச் செய்வார்.
- வழங்கப்பட்ட விடயத்தினை ஒன்றுடன் ஒன்று தொடர்புற எடுத்துரைப்பார்.
- தாம் கூறுகின்ற விடயத்திற்குப் பொருத்தமான செம்மையான மொழி நடையைக் கையாள்வார்.
- தாம் பெற்ற அனுபவங்களை மற்றவரும் உணரும் வகையில் விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- முடிவுறாக் கதைகள் சிலவற்றை மாணவர்களைக் கேட்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி அவர்களது அனுபவ விபரிப்புக்களைக் கூறச் செய்தல்.
- அனுபவ விபரிப்புக்களைச் சம்பவங்களாகப் பட்டியற்படுத்திக் கூறுதல்.
- சொற்கள், சொற்றொடர்களின் கருத்து விளக்கங்களைக் கூறச் செய்தல்.
- கணிப்பீட்டினையும் மதிபீட்டினையும் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

பொருத்தமான முடிவுறாக் கதைகள் சிலவற்றைத் தயாரிக்குக. அல்லது சில தலைப்புக்களை வழங்கி மாணவர்களின் சம்பவ விபரிப்புக்களைக் அறிந்துகொள்க.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- ஒலிப்பதிவு நாடாக்கள்
- அகராதி
- முடிவுறாக் கதைகள் சிலவற்றை அல்லது சம்பவ விபரிப்புத் தலைப்புக்கள் சிலவற்றை வழங்குதல்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தரப்பட்டுள்ள தலைப்பில் சம்பவ விபரிப்புக்களை செய்வார். அல்லது, தரப்படும் முடிவுறாக் கதைகளை விபரித்துக் கூறுவார்.
- சம்பவ விபரிப்புக்களைத் தொடர்புபடுத்திக் கூறுவார்.
- சம்பவ விபரிப்புக்களை அல்லது, அவற்றின் அனுபவங்களைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வேற்றுமைகள்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்**

- வேற்றுமை என்ற பதத்தின் பொருளைக் கூறுவார்.
- வேற்றுமைகளின் உருபுகளையும், சொல்லுருபுகளையும் அட்டவணைப்படுத்துவார்.
- வேற்றுமைகளுக்குப் பொருத்தமான உதாரணம் தந்து விளக்குவார்.
- தமது ஆக்கங்களில் வேற்றுமைப் பயன்பாடுகளைப் பிரயோகித்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சில வாக்கியங்களின் பட்டியலைக் காட்சிப்படுத்தல்.
- வேற்றுமை உருபுகளினால் பொருள் வேறுபடுத்தப்படுவதனை எடுத்துக்காட்டல்.
- சொல்வடிவில் அமைந்த சொல்லுருபுகளினால் வாக்கியங்களின் பொருள் வேறுபடுத்துவதனை உதாரணங்கள் மூலம் விளக்குதல்.
- வேற்றுமைகளை வகைப்படுத்தி விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- மாணவர்களுக்குச் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குதல்.
- மாணவர்கள் தமது செயற்பாட்டுப் பத்திரங்களை முன்வைக்கச் செய்தல்.
- ஏனைய மாணவர் / குழுக்களில் ஆலோசனைகளையும் கேட்டு அறிதல்.
- தேவையானவற்றிற்கு விளக்கமளித்தல்.
- மாணவர்களைக் கணிப்பீடு, மதிப்பீடு செய்தல்.

**முதன்மைப் பதங்கள் ( key words ), எண்ணக்கருக்கள்**

- பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபினை ஏற்பதால், அதன் பொருள் வேறுபடுவதை வேற்றுமை என்கிறோம்.
- பெயர்ச்சொற்களின் சிறப்பியல்பு வேற்றுமை ஏற்பதாகும்.
- முதலாம் வேற்றுமைக்கு உருபு கிடையாது.
- தமிழில் எட்டு வேற்றுமைகள் கூறப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- வேற்றுமை
- அட்டவணை
- டிமைன்தாள்
- எழுதுதாள்
- எழுதுகருவி

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வேற்றுமை என்பதனை விளக்கிக் கூறுவார்.
- வேற்றுமைகளை பொருள், உருபு, சொல்லுருபு என்னும் அடிப்படையில் அட்டவணைப் படுத்திக் காட்டுவார்.
- பொருத்தமான உதாரணங்களைக் காட்டி வேற்றுமைகளை விபரிப்பார்.
- வேற்றுமைப் பயன்பாடுகளை தமது ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- தற்கால வழக்குப்பற்றி அறிந்து எழுதுவார்.